LA NEWS ... MADAVARAM HIGH ROAD, Perambur, Madras 11.

தென்றல்

கிழமை இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உள்பட) விலை 16 புதிய காசு ★ வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, தை 15 (28-1-'61) சனிக்கிழமை | இதழ் 32

வேலூரில் துவங்கிய வேதனை

"தத்துவ மாற்றம்" தகராறாக முற்றி வெடித்தது

கண்ணதாசன்

ஜனவரி 21-ந் தேதி என்பது, கழகத் தோழர்கள் மறந்துவிட முடியாத ஒரு நாளாகிவிட்டது. சரித்திரப் புகழ் பெற்ற வேலூர் நகரம், கழக வரலாற்றிலும் இடம் பெற்றுவிட்டது. அறிந்தோ அறியாமலோ ஒரு நாழிகையில் சிலர் செய்த தவறு, கழகத்தில் ஒரு திருப்பம் ஏற்படவே வழிசெய்துவிட்டது.

ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுக் காலமாகவே, கழகத்திற்குள் ஒருவகையான புகை எழும்பிக் கொண்டே இருந்தது. அவ்வப்போது எதிர்க்கட்சிக் காரர்கள் இதைக் கிளர்வதும், நாம் நமது வாக்கு வன்மையால் இதை மூடி மறைப்பதும் வழக்கமாக இருந்து வந்தது. இதுவரையில் வெளியுலகிற்கு நம்மைச் சரியாகக் காட்டிக் கொள்வதில், நாம் எல்லோருமே எச்சரிக்கையாக நடந்து வந்தோம். இப்போதும் அதே மாதிரிச் செய்திருக்க முடியும்; செயற்குழுச் சம்பவம் மட்டும் நடைபெறாதிருந்தால். ஆனால், எப்படியோ புண்ணைக் கீறியே ஆற்றவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இனியும் மூடி மறைத்துக் கொண்டிருப்பதைவிட, முழு விபரங்களையும் வெளிப்பட விவாதித்து, முடிவு காண்பது கட்சியைக் கெடுத்து விடாது என்றே கருதப்படுகிறது.

ஆரம்ப முதலே கட்சியில் தத்துவத் தகராறு தலைதூக்கி நிற்கிறது. லட்சிய எல்லையை நோக்கிச் செல்வதில் பெரும் முரண்பாடுகள் கட்சியில் ஏற்பட்டன. விடுதலை இயக்கம் விடுதலை இயக்கம் என்று சொல்லளவில் சொல்லிக் கொண்டிருக்கிறோமே தவிர, செயலளவில் எவ்வளவு தூரம் நடந்தோமென்பது சிந்தனைக்குரியது. திட்டவட்டமாக எந்த வழியில் திராவிட நாடு பெறப்போகிறோம் என்பதை நாம் தெளிவு படுத்தவே இல்லை. அவ்வப்போது அண்ணா அவர்கள் சொல்லும் வழிகளே, திராவிட நாட்டிற்கு வழிகளாகக் கருதப்பட்டு வந்திருக்கின்றன,

1.) நாடகத்தின் மூலம் திராவிடநாடு.

2.) தணிக்கை செய்யாமல் இரண்டு சினிமாப் படங்கள் எடுத்தால் அதன் மூலம் திராவிடநாடு.

இப்படிச்சில வழிகளை பல தலைவர்கள், பல மேடைகளில் பேசியதை நாம் கேட்டிருக்கிறோம். இந்த வழிகளைப் பற்றி கழகத்தின் கீழ்மட்டத்திலுள்ள தோழர்கள் எப்படிச் சிந்தித்தார்களோ நமக்குத் தெரியாது. ஆனால் பேச்சுக்குக் கைதட்டல் கிடைத்தது. இருந்தபோதிலும், தத்துவ ரீதியாக இவற்றைச் சிந்தித்துப் பார்ப்பவர்கள் வருந்தவே செய்வார்கள். சரித்திரத்தின் எந்த அங்கமும் இந்த வழிகளை ஒப்புக்கொள்ளாது. இந்திய அரசியல் சட்டப்படி, பாராளுமன்றத்தில் பெருவாரியான வாக்கிருந்தால் மட்டுமே, ஒரு பகுதி தனியாகப் பிரிய முடியும். கத்தியின்றி இரத்தமின்றித் திராவிட நாடு பெறுவதென்றால், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பகுதியினர் நம்மை ஆதரிக்க வேண்டும். இது நடக்கக்கூடிய காரியமல்ல.

அடுத்தது நாடகத்தின்மூலம் திராவிடநாடு. (நல்ல வழிதான்- நடந்தால் சரிதான்!)

அடுத்தது, தணிக்கையில்லாமல் சினிமா எடுத்தால் திராவிட நாடு. இதற்கு நாம் என்ன பதில் சொல்வது?

[illegible] வெளியிட்டு வந்த வழிகள், நம்முடைய தைரியத்தைக் காட்டப் பயன்பட்டனவே தவிர, பொருந்தக் கூடியனவாக இல்லை. இதுபற்றி வெகுநாட்களாகவே ஒரு குமுறல், கட்சிக்குள்ளேயே இருந்துவந்தது. அரசியலையே முழுநேர வேலையாக் கொண்டு, அதற்கென்றே பல ஏடுகளைப் படித்து, பலரோடு விவாதித்து துணைக்கண்டம் முழுவதிலும் மதிப்பைப் பெற்ற தோழர் சம்பத் அவர்கள், நம் மதிப்பிற்குரிய தலைவர் அண்ணா அவர்களிடம் இதுபற்றி வெகுவாக விவாதித்தார்கள். சம்பத்தின் தீவிரமான பாதைகளுக்கு, இப்போது போலவே அண்ணா அப்போதும் தயாராக இல்லை. மறியல், ஒத்துழையாமை - வரிகொடா இயக்கம் - சட்டத்தை மீறுதல் போன்ற நிகழ்ச்சிகளின் மூலமே லட்சியத்தை அடைய முடியுமென்ற எண்ணம், கட்சியின் குறிப்பிட்ட ஒரு பகுதியினரிடம் நிலவ ஆரம்பித்தது. அந்தப் பகுதியினர் கழகம்வரை முறையின்றிச் சினிமாத்துறையில் கால் வைத்திருப்பதையும் கடுமையாக எதிர்த்தனர். ஆளுங்கட்சிக்குத் திருத்தங் கூறும் வெறும் எதிர்க்கட்சியாக நாம் இருந்தால் கவலையில்லை. விடுதலை இயக்கம் என்ற பெயரை வைத்துக்கொண்டு, விளையாட்டு வேடிக்கைகளில் அதிகம் கவனம் செலுத்துவது முறையற்றது என்பது அவர்கள் [illegible]. பின்னால் குற்றஞ் சாட்டப்பட முடியாதவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். அதனால் அவர்கள் சொல்லுக்குக் கணிசமான அளவுக்குக் கட்சியில் ஆதரவு கிடைத்தது, சினிமா நண்பர்கள் சிலருக்கு எரிச்சலை மூட்டிற்று. அதன் தொடர்ச்சியாகப் பொதுக்குழு உறுப்பினர்கட்கு சம்பத்தின் கடிதம் கிடைத்தது. குமாரபாளையத்தில் பொதுக்குழுக் கூடியது. அங்கே தீவிர வாதிகள் சமாதானப்படுத்தப்பட்டார்கள். இரண்டுங்கெட்ட நிலையில் அவர்கட்கு ஆறுதல் சொல்லப்பட்டது.

அதற்கிடையிலும் தோழர் சம்பத் அவர்கள், இந்தி எதிர்ப்புப் போராட்டத் தீர்மானத்தை உருவாக்கி வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக, துணைக் கண்டத்தலைவர் சென்னைக்கு வரும் செய்தி கிடைத்தது. உடனே தோழர் சம்பத் அவர்கள் பெருமுயற்சி செய்து, போராட்டக்குழுவையும் செயற்குழுவையுங் கூட்டி, கருப்புக் கொடி எண்ணத்தை வெளியிட்டார்கள். அதையும் அண்ணா அவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். "ஒரு தேதி நிர்ணயத்து துணைக்கண்டத் தலைவருக்குக் கடிதம் அனுப்பியிருக்கும்போது-

(6-ம் பக்கம் பார்க்க)

கலகம் பிறந்தது; நியாயம் பிறக்கும்; கவலை வேண்டாம்.

படிக்காத மேதைகள்

"படிக்காத மேதை" என்னும் திரைப்படத்தில் பாடப்பெறும் "படித்ததினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு" எனத் தொடங்கும் பாடலில்,

வாழைமரம் படித்ததில்லை
 கனிகொடுக்க மறந்ததா-உயர்
வான்முகிலும் கற்றதில்லை
 மழைபொழிய மறந்ததா?
சோலையெல்லாம் கற்றதில்லை
 நிழல்கொடுக்க மறந்ததா-
  எங்கும்
சுதந்திரமாய்ப் பாடிவரும்
 குயிலும்பாடம் படித்ததா?

—என வரும் அடிகள்

பொருட் குற்றமுள்ளவையென்றும், வாழ்வியலோடு பொருந்தாது என்றும் ஒரு சில படிக்காத (இலக்கியத்தை) மேதைகள் கூறுகின்றனர்.

கவிஞர் கண்ணதாசன் எழுதிய இப்பாடலில் பொருட் குற்றமில்லை என்பதையும், இது நிறைந்த அர்த்தமுள்ள பாடல்தான் என்பதையும், வாழ்வியலுக்கும் உலகியலுக்கும் பொருந்தும் பாடல்தான் என்பதை நிறுவுவதற்கும், அர்த்தமற்ற பாடல் என்று கூறும் அந்த ஒரு சிலருக்கு விடையிறுப்பான் வேண்டியும்; இக்கட்டுரை எழுதப் பெறுகிறது என்க.

இப்பாடலில் குற்றம் காண்பவர்கள், தமிழ் இலக்கணப் பயிற்சியும், இலக்கியப் பயிற்சியும் உடையவர்களா என்பதை நாமறியோம். அப்படி அவர்கள் ஆய்ந்து பல பனுவல்களைப் பயின்றிருந்தால், நிச்சயமாக அவர்கள் ஒரு கருத்துக் குருடரேயாவர்.

கவிஞர்கள் விதிக்கு அடங்கியவர்கள் அல்லர். அவர்கள் எதையும் கலைக் கண்ணோடு பார்ப்பவர்கள். அவர்களுக்குக் கவிதை உலகத்தில் தனியுரிமை உண்டு. "Poets are the unacknowledged legislators of the world" என்றார் ஷெல்லி. இன்னொரு மேனாட்டு அறிஞர் "Poet is not-any permissive potentiate, but is Emperarin his own Right" என்றார். ஆம்! கவிஞர்கள் எந்த விதிக்கும் அடங்கியவர் அல்லர். விதிகளுக்கும், இலக்கண வரம்பு கட்கும் உட்பட்டுக் கவிதை யாத்தால் அது பொருட் சிறப்பற்றதாகிவிடும். மேலும், அவர்கள் இலக்கணத்தைத் தேடி அலைவதில்லை. பொருள் குற்றம் இருக்கிறதா என்று பூதக்கண்ணாடி வைத்துப் பார்ப்பதில்லை. அவர்கள் எண்ணத்தில் தோன்றுவதை வண்ணக் கவிதை யாக்குகின்றனர். அதனுள்ளேயே இலக்கணமும், பொருட் சிறப்பும் அமைந்துவிடுகின்றது. இதுவே உண்மை. இந்த அடிப்படையில் எழுந்ததுதான் கவிஞர் இயற்றிய இப்பாடலும் என்பதை அந்தச் சிலர் அறிய வேண்டும்-

இனி, இந்தப் பாட்டில் குற்றம் கண்டுபிடித்துக் கூறுவோர் என்ன கூறுகின்றனர் என்பதை நோக்க வேண்டும். அவர்கள், உயர் திணையான ஆணுக்கு, அஃறிணையான மரத்தையும், முகிலையும், வில[illegible]கையும், பறவையையும் உவமைய[illegible]கிக் கூறுவது தவறு. இது [illegible]பாருந்தாது; எனவே இப்பாடல் [illegible]ற்றமுடைய பாடலாகும் என்று கூறுகின்றனர்; அந்த இலக்கணம் அறியாத இரக்கத்திற்குரியவர்கள். உயர் திணைக்கு அஃறிணையை உவமையாக்கிக் கூறுவது பொருந்தும். இப்படி உவமை காட்டி எழுதுவது இலக்கண மரபுக்கு மாறுபட்டதல்ல என்பதை அவர்கள் அறிய வேண்டும். இஃது இலக்கணம் வகுத்த ஒன்று என்பதையும், இலக்கியம் பயின்று வரும் ஒன்று என்பதையும் அவர்கள் அறியார் போலும்.

இப்பாட்டு, "படிக்காத மேதை"யில் எந்தச் சூழ்நிலையில் பாடப்படுகிறது என்பதை முதலில் ஆய்வோம். கதைத் தலைவனான ரங்கன் பள்ளி சென்று படிக்காதவன், அவன் ராவ்பகதூர் சந்திரசேகரன்" வீட்டிலிருந்து வெளியேறி, வச்சிரவேலு என்பவரின் தொழிற்சாலையில் வேலை செய்து தன் குடும்பத்தை நடத்துகிறான். இந்த நிலையில், ராவ்பகதூரின் குடும்பம் நொடித்துவிடுகிறது. ராவ்பகதூர் மிகவும் சிக்கனத்துடன் வாழ்க்கை நடத்துகின்றார். அவர் நிலையைக் கண்ட ரங்கன் அவருக்குத் தன்னால் முடிந்த வரை உதவி செய்கின்றான். ராவ்பகதூருக்கு அவன் செய்யும் உதவிகளை நினைத்து, அவர் கண்ணீர் வடிக்கிறார். ராவ்பகதூர் இறந்த பின்னரும், அவரது மனைவிக்கும் பல உதவிகளைச் செய்கிறான். ஒரு நாள் வச்சிரவேலுவின் மகனை ஒரு பெரிய அபாயத்திலிருந்து காப்பாற்றுகிறான். அவன் செய்த உதவிக்காக வச்சிரவேலுவின் மகன் ரங்கனுக்குப் பணம் கொடுக்கின்றான். அவன்தான் தன்னை வளர்த்த ராவ்பகதூரின் மகளை மணந்துகொள்ள மறுத்தவன் என்பதை அறிந்தவுடன் அவன் கொடுத்த பணத்தை வீசியெறிகிறான். ராவ்பகதூரின் மனைவிக்கு உடல் நலமில்லை என்பதை யறிந்தவுடன், தன் சம்பளத்தையே கொடுத்து அந்த அம்மாளைக் காப்பாற்றுகிறான். ரங்கன் படிக்காதவனாக இருந்தும் அவன் செய்யும் உதவிகளையும், நல்ல செயல்களையும், கள்ளங் கபடமற்ற உள்ளத்தையும் கண்ட அவன் மனைவி (லட்சுமி) படிக்கவில்லையே என்று வருந்தும் அவனது மனக் குறையைப் போக்கவும், படிக்காத ஆண் மகனைக் கணவனாகக் கொண்ட தன்னுடைய மனக்குறையைப் போக்கிக்கொள்ளவும், இப்பாடலைப் பாடுகின்றாள். இஃது இந்தச் சூழ்நிலையில் பாடப்படுவது சாலப் பொருந்தும். இதற்கு விதி பின்னர் கூறுதும்.

படித்துப் பட்டம் பெற்ற ராவ்பகதூரின் ஆண் மக்கள் இருவரும், தன் தந்தையையும், தங்களைப் பெற்ற அன்னையையும் கவனிக்க முன்வராத பொழுது படிக்காத ரங்கன் அதுவும் யாரோ ஒருவன்- ராவ்பகதூருக்கும், அவரது மனைவிக்கும் எவ்வளவு உதவி செய்கிறான் என்பதை நோக்கும் போதுதான் இப்பாடலின் தரம் உயர்கிறது. ரங்கனை அஃறிணையோடு ஒப்புமை காட்டி இப்பாடலை எழுதாது, உயர் திணையான தேவரோடும், கடவுளோடும் ஒப்புமை காட்டிக் கவிஞர் எழுதி இருந்தால், இப்பாடல் இத்துணைச் சிறப்புப் பெற்றிருக்காது. ஏனெனில், படித்த மனிதர்கள், படிக்காத ரங்கனைப்போலவும்; படிக்காத அஃறிணையைப் போலவும் உதவி செய்யவில்லையே! இதை விளக்குவதற்காகத்தானே இப்பாடல் பாடப்படுகிறது. எனவே, கவிஞர் உயர் திணையோடு ஒப்பிட்டுப் பாட்டெழுதாது அஃறிணையோடு ஒப்பிட்டுப் பாட்டெழுதியது பொருத்தமானதேயாகும்.

இனி, பாட்டின் பொருளுக்கு வருவோம். கவிஞருடைய கண், விண்ணையும் நோக்குகிறது, மண்ணையும் நோக்குகிறது, அதே வேளையில் படிக்காத ரங்கனையும் நோக்கி ஒருண்மையை, அவருடைய கண்ணும் கருத்தும் உணர்ந்துகொள்கின்றது.

"Poet's eye doth glance from heaven to earth, from earth to heaven"

என்றார் சேக்ஸ்பியர். இவர் கூற்றும் இக்கருத்தை நன்கு வலியுறுத்துகிறது. விண்ணிலுள்ள முகில் படிக்கவில்லை. மண்ணிலுள்ள மரமும், சோலையும் படிக்கவில்லை. ஆனால், வாழைமரம் தீஞ்சுவைக் கனியையும், சோலை குளிர்சேர் நிழலையையும் தருகின்றது. முகில் உலகம் செழிக்கவும், மக்கள் வாழவும் கைம்மாறு கருதாது மழையைக் கொடுக்கின்றது. ரங்கனும் அஃறிணையைப்போலப் படிக்கவில்லை; பிறருக்கு உதவுகின்றான், உயிரையும் கொடுக்கத் துணிகின்றான். இதைக் கண்ட கவிஞர் படிக்காத இவையெல்லாம் உதவும்போது படித்துப் பட்டம் பெற்ற அறிவாளிகள், ஏன்பிறருக்காகப் பயன்படும் மரம் உள்ளூரில் பழுத்தது போலவும், ஊருணியைப்போலவும், மருந்து மரத்தைப்போலவும் பயன்படாது, நச்சுமரம்போல உதவுகின்றனர் என்று மறைமுகமாகக் கேட்கின்றார் இந்தக் கருததை "கொடுப்பதற்கும் சிரிப்பதற்கும் படிப்பு வேண்டுமா?" என்று கேட்கிறார்: இதை அப்பாடலின் மூன்றாவது அடியில் காணலாம். படிப்புத் தேவையில்லை. படித்திருந்தும் கொடுக்கவில்லையே என்கிறார் கவிஞர்.

வாழைமரம் படிக்கவில்லை, பயனுகிய கனியைக் கொடுக்க மறக்கவில்லை, சோலை படிக்கவில்லை, பயனுகிய நிழலைக் கொடுக்க மறக்கவில்லை. அதுபோல ரங்கனும் படிக்கவில்லை பிறருக்குப் பயன்பட (உதவ) மறக்கவில்லை. இதைத்தான் கவிஞர் இப்பாட்டின் மூலம் கூறுகின்றார்.

"இன்மையுள் இன்மை
 விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை"

என்னும் திருக்குறளுக்கு, ஒருவனுக்கு வறுமையுள் வறுமையாவது விருந்தினரை ஏற்றுக் கொள்ளாது நீக்குதல்; அது 'போல' வன்மையுள் வன்மையாவது அறிவின்மையால் மிக்க செய்தாரைப் பொறுத்தல் என்று, 'போல' என்னும் உவமை உருபு கொடுத்து, எடுத்துக் காட்டு உவமையெனக் கொள்ளலாம். அந்தச் சிலர், பாட்டில் ரங்கனைப் பற்றிக் கூற[illegible]யே எனக் கேட்கலாம். ரங்கனும் படிக்கவில்லை, பிறருக்கு உதவி செய்ய மறக்கவில்லை என்பதைக் கவிஞர் "படிக்காதமேதைகளும் பாரினில் உண்டு" என்று உலகின மேல் ஏற்றிக் கூறுகின்றார். படித்த மேதைகள் செய்ய மறந்த உதவிகளைப் படிக்காத காரணத்தால் விலங்கை யொத்த ரங்கன் செய்கிறானே! அந்தக் காரணத்திற்காகவே அவனைப் புகழ்ந்து (மறைவாக) பாடுகிறார். உறுதியாக வள்ளுவரே கூறுகிறாரே படிக்காதவனை விலங்கென்று. அந்தப் பாட்டு "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்" என்ற பாட்டாகும். இதற்கு உரையெழுதும் பரிமேலழகர் "விலங்கின் மக்கட்கு ஏற்றமாய உணர்வு மிகுதி காணப்படுவது கற்றார் கண்ணேயாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்த பிறப்பினர் அல்லர் என்பதாம்" என்று எழுதுவர். மேலும், எந்த மனைவியும் தன் கணவன் முன்பு அவன் பெயரைச் சொல்லிப் புகழ்ந்து கூறுள். இது மரபும் அன்று. எனவே பாட்டின் பொருளில் குற்றமில்லை என்பதை இதுவரை கூறியவாற்றால் நன்கறியலாம்.

அடுத்ததாக உயர் திணையான ஆணுக்கு, அஃறிணையாகிய வாழை மரத்தையும், முகிலினையும், சோலையையும், பறவையையும் சுட்டிக்காட்டி (உவமையாக்கி)க் கூறுவது அர்த்தமற்றது என்பது அந்தச் சிலரின் வாதம். உலகில் வாழும் உயிரினங்கள் என்று பொதுவாகக் கூறுங்காலை, மனிதனையும் சேர்த்துத் தானே கூறுகின்றோம். மனிதனுக்கு, எதையும் பகுத்து நன்று, தீது என்று அறியும் பகுத்தறிவு இல்லையெனின் மனிதனும் அஃறிணைதான்; நடமாடும் ஒரு விலங்காகத்தானே மனிதன் எண்ணப்படுவான். மரம் ஓரறிவுயிர் எனவும், விலங்கும், புள்ளும் ஐயறிவுயிர், எனவும் கொள்ளப்படுகின்றது. அறிவு வகையில் மனிதனை அஃறிணையோடு சார்த்திப் பார்ப்பின், அஃறிணையைக் காட்டிலும் மனிதன் ஓர் அறிவேகூடப் பெற்றுள்ளான்.

கிருங்கை நகரான்

(11-ம் பக்கம் பார்க்க)

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 28-1-'61 | இதழ் 32

கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு

நாத்திகர்கள்.

பிரிவினை விரும்பிகள்.

பிற்போக்காளர்கள்.

கூத்தாடிகள்.

கொள்கையற்றவர்கள்.

இப்படிப்பட்ட வாசகங்களை வீசி, எதிர்க்கட்சிக்காரர்கள் நம்மை ஏசி வந்தாலும், கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு என்ற மூன்றே வார்த்தைகளில், ஜனநாயக உலகு மெச்சும் கொள்கைகளை, நாம் பெருமைப்படத்தக்க முறையிலும், பிறர் கண்டு பாராட்டத்தக்க வகையிலும் நமது கழகத்தின் பொதுச் சொத்தாக்கி வைத்திருக்கிறார் நம் மதிப்பிற்குரிய அண்ணா அவர்கள்.

நாம் சொல்லி மகிழ்ந்ததும், பிறருக்குச் சொல்லிக் காட்டியதுமான இத்தத்துவத்தை, இனிச் சொல்வதற்கும், சொல்லிக் காட்டுவதற்கும் தயங்கவேண்டிய நிலையை, தமிழ்நாட்டு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்திவிட்ட - "வேலூர் செயற்குழு" தந்திருக்கிறது.

ஒரு கட்சியின் வளர்ச்சி குறித்தும், முன்னேற்றம் குறித்தும், சட்டங்களும், திட்டங்களும் சம்பந்தப்பட்டவர்களால் உருவாக்கப்படும்போது-விரதபேதங்கள் வளர்வது இயற்கையே.

ஆனால், வாதங்கள் முற்றி, "பரபரப்பு", "கலகம்", "ரசாபாசம்" போன்ற சொற்களால் வர்ணிக்கத்தக்க நிலையை அடைவது-ஒரு கட்சிக்கும்-அந்தக் கட்சியை நடத்திச் சொல்கின்றவர்களுக்கும் புகழ்தரத் தக்கதும் - பயன்தரத் தக்கதுமான நிகழ்ச்சியாக அமையாது. அதுவும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கொள்கையை "தாரக மந்திர"மாகக் கொண்ட நம் இயக்கத்தில், இப்படியொரு சம்பவம் நிகழ்ந்தது, நாடு எதிர்பாராததும்-அதிர்ச்சியடையக் கூடியதுமான நிகழ்ச்சியேயாகும்.

கட்சி வளர வளர, கருத்து வேறுபாடுகள் வளரத்தான் செய்யும். கட்சியிலுள்ள ஒருவர் கூறிய கருத்தை இன்னொருவர் தனக்குச் சரியென்று படாவிட்டால், சொன்னவர் யாராக இருந்தாலும் எதிர்த்துக் கூறுவதும் திருத்தம் சொல்வதும் 'பாவ'மான காரியமல்ல.

எதிர்ப்பிலும், திருத்தத்திலும் என்ன உண்மைகள் அடங்கியிருக்கின்றன என்பதை, ஒழுங்கான முறையில் விவாதித்துத் தீர்வு காண்பதுதான் ஒரு ஜனநாயக இயக்கத்தைச் சார்ந்திருப்போர் கைக்கொள்ள வேண்டிய கொள்கையும் கடமையுமாகும்.

இதை மறந்து, வேலூரில் ஒரு சிலர் உருவாக்கிவிட்ட பரபரப்பால்-இன்று நாடும், கட்சியும், தலைவர்களும், தொண்டர்களும் பரபரப்படைய வேண்டிய நிலை வந்துவிட்டது.

இந்தப் பரபரப்பு அடங்கவும் - இனியும் தொடர்ந்து புதிய பரபரப்புகள் தோன்றாது தடுக்கவும்-பரபரப்புக்குக் காரணமாயிருந்த காரியத்தையும், அந்தக் காரியத்திற்காகப் பரபரப்பை உண்டாக்கியவர்களைப் பற்றியும் - தெளிவாகவும் சரியாகவும் தெரிந்து - ஒழுங்கானதும் நியாயமானதுமான முடிவுக்கு வர, கழகத் தோழர்கள் கடமை - கண்ணியம்-கட்டுப்பாடு இவைகளைக் காப்பார்களாக!

என் இனிய நண்பர்களே!

நல்லோர் உரைகளைக் கேட்டுக் கேட்டு மெல்லிய பண்பு படைத்த உங்கள் செவிகளைக் கொஞ்சம் திறந்து வைத்துக் கொள்ளுங்கள்.

தனக்கென வாழ்ந்து பழக்கமில்லாதது என்று உங்களால் சொல்லப்பட்ட ஒரு இதயத்தை நீங்கள் இழந்து விடப் போகிறீர்கள்.

உங்கள் கூடத்தில் கட்டப்பட்டிருந்த நன்றிமிக்க ஒரு உருவம், தன் கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு போய் விடப் போகிறது.

உள்ளதை உள்ளபடி சொல்வது எவ்வளவு பெரிய தவறு என்பதை அவன் அனுபவ பூர்வமாகக் கண்டுவிட்டான்.

நெஞ்சத்தால் ஒரு மனிதன், சொல்லால் ஒரு மனிதன், செயலால் ஒரு மனிதன், என்று ஒவ்வொரு மனிதனும் மூன்று வடிவம் எடுக்கும் உலகத்தில், அவன் மட்டும் ஒரே மனிதனாக வாழ்ந்து விட்டான்.

அவன் அன்போடு கைபோட்ட சில தோள்களில், முட்செடிகள் கத்தை கத்தையாக வளர்ந்திருந்தன.

யாரைக் குத்துகிறோம் என்று தெரியாமலேயே அவை, அவன் கையைக் கிழித்து விட்டன.

கையில் ரத்தம் வடிகிறது என்று அவன் கத்தினான்.

அதை எப்படி நீ சத்தம் போட்டுச் சொல்லலாம் என்று சிலர் கோபித்தனர்.

இரகசியங்களைக் காப்பாற்றிக் கொள்ள அவனுக்குத் தெரியாது.

அதிலும், பத்துப்பேரின் கட்டளைக்குப் பயந்து, தான் தவறென்று நினைப்பதைச் சரியென்று மாற்றிக் கொள்ள அவன் தயாராக இல்லை.

பாம்பைக் கம்பால் அடிக்க வேண்டும்.

வலைவீசியும் தூண்டிலிட்டும் மீனைப் பிடிக்க வேண்டும்.

பறவைகளைக் கண்ணி வைத்து மடக்க வேண்டும்.

ஆனால்,

தூண்டிலிட்டுப் பாம்பைப் பிடிக்க முடியாது.

அற்புதமான பாடல்களைப் பாடி, புல்லாங்குழலில் இனிய கீதங்களை வாசித்து, வீணையை மீட்டி யானையை மடக்கிய சரித்திரத்தை அவன் படித்ததில்லை.

தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும் காட்சியையும், மகிழ மலர்கள் பூத்துக் குலுங்கும் அழகையும், கன்னி வயதிலேயே நரைத்து விட்ட கூந்தலைப்போல், மலையருவி விழும் சிறப்பையும், பெண்களை விட்டுப் பறந்து வந்த கண்களைப்போல் வண்டுகள் பறந்து திரியும் அலங்காரத்தையும்,வந்ததுதான் வந்துவிட்டோம், வளர்ந்துதான் பார்ப்போமே என்று பனையும் தென்னையும், வான் பார்த்து நிற்கும் ஒய்யாரத்தையும், ஓவியர்கள் கண்டு ஓவியமெழுதலாம்.

கவிஞர்கள் கண்டு காவியம் பாடலாம்.

ஓய்வு மிகுந்தவர்கள் கொஞ்சம் உட்கார்ந்து ரசிக்கலாம்.

கணையும் வில்லும் கையிலே தாங்கி "புலியெங்கே? சிங்கமெங்கே?" என்று புறப்படுவோர், மானைப் பார்த்து மயங்கி விழுந்தால், மலர்களைப் பார்த்துச் சொக்கி நின்றால், வேட்டையும் நடக்காது - விரும்பியதும் கிடைக்காது.

நம் இரண்டு கால்களையும், இரண்டு கோயில்களில் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஒரு கோயில் தியாக உள்ளத்தை வளர்ப்பது; ஒரு கோயில் ஆசைகளை வளர்ப்பது.

தியாகமும் ஆசையும் உறவினர்களல்ல.

ஆசைக் கோயிலில் விளம்பரப் பிரியர்களின் மடியிலே நாம் தவழக்கூடாது.

"வாருங்கள் ஒரு முடிவுக்கு வருவோம்." என்று தடித்த குரலில் அவன் கூறினான்.

உலகத்தில் எந்த அங்கமும் உண்மைகளை உண்மையளவில் ஏற்றுக்கொள்வதில்லை.

எதிரிகளின் கேலியை ஏறிட்டுப் பார்த்துவிட்டு நடக்கிறவன், நண்பர்களின் கேலியைத் தாங்கமுடியாதவனானான்.

இவை "போய்வருகிறேன்" கட்டுரையிலுள்ள சில பகுதிகள்

அறிவு விடு தூது

"அருப்பை கிழார்"

அறிவே! அறிவறிந்தார் ஆற்றலே! சான்ருேர்
நிறைவே! நினைச்சார்ந்தார் நெஞ்சில்—கறைதீர

நல்ல விளக்கேற்றி நவைதீர் பொருள்சேர்க்கும்
சொல்லரிய பேரருளின் தோற்றமே!—தொல்லுலகில்

கற்பனைக்கும் எட்டாத காலத்தே மக்களினம்
பற்பலவாப் பட்டார் பலதுன்பம்—நிற்பதற்கும்

நீட்டிப் படுப்பதற்கும் நெஞ்சயர்ந்து தூங்குதற்கும்
கூட்டமாய் வாழ்ந்து குலவுதற்கும்—காட்டில்

நெடியமரப் பொந்தெங்கே நீண்டகுகை எங்கே
கொடியவிலங் கில்லாத தெங்கே—விடியுங்கால்

வாழ்வோமா அன்றி வனவிலங்கின் பேழ்வாயில்
வீழ்வோமா என்றஞ்சி வெம்பினுர்—பாழுலகில்

நாடேது மக்கள் நகரேது வாழுகின்ற
வீடேது வாழ்க்கை விதமேது—வாடாமல்

சோறேது சுற்றத் துணியேது தீஞ்சுவைகள்
ஆறேது காட்டில் அலையும்நாள்—மாருமல்

வேட்டை விலங்கால் வெறுங்காய் கனிகிழங்கால்
காட்டுத் தழையால் கடும்பசியை—ஓட்டி

மரவுரியும் தோலும் உடுத்திமழை வந்தால்
அரவுபோல் மெய்யொடுங்கி அஞ்சி—இரவெல்லாம்

தூங்காமல் இன்பமொன்றும் துய்க்காமல் நோய்வந்தால்
சாங்காலம் வந்ததென்று செத்தாரே!—ஏங்காதீர்!

இன்னல் பறந்தோடும் என்மக்காள்! அஞ்சாதீர்!!
முன்னர் மொழியொன்று காணுவீர்!-பின்னரே

எண்ணம் பரிமாற ஏற்றவழி உண்டாகும்
கண்ணில் மணிபோல் மொழிகாப்பீர்!—மண்ணுலகில்

ஊழி பலவாக உற்றநன்மை தீமையெலாம்
ஆழ நினைவில் அடுக்குவீர்! சூழநிற்கும்

பல்வேறு பட்ட பருப்பொருட்கும் நுண்பொருட்கும்
சொல்வேறு கண்டு குணம்சொல்வீர்—கல்வேறு

மண்வேறு காழ்த்த மரம்வேறு பல்பொருளும்
எண்வேறு வேருய் இணைகண்டு—பெண்வேறு

தாய்வேறு தந்தை தமையன்மார் தம்பிதங்கை
சேய்வேறு வேறென்று செப்புவீர்!—ஓயாமல்

சிந்தித்துச் சிந்தித்துச் செம்பிரும்புத் தாதுகளை
வெந்தித்து வேண்டுவன செய்குவீர்!—புந்தியிலே

நிற்பேன்நான் மக்காள் நினைத்தால் அருள்புரிவேன்
கற்பீர் எழுத்து! கடுந்துயரம்—நிற்காதே!!

என்றருளி நீயெழுந்தாய் ஈடில்லாப் பேரறிவே!
நன்றுலக மாந்தருக்கு நற்றுணையாய்!—அன்றுமுதல்

நாடுகண்டார் நல்ல நகர்கண்டார் வாழ்வதற்கு
வீடுகண்டார் வாழ்க்கை விதங்கண்டார்—தேடுகல்வி

ஏடுகண்டார் நோய்போக்க ஏற்ற மருந்துகண்டார்
மாடுகண்டார் வாகனங்கள் கண்டாரே—கூடுகின்ற

செல்வப் பெருக்கால் செழித்த வளவாழ்வும்
பல்வகை வாணிபமும் பார்முழுதும்—வெல்வகையும்

நின்னருளால் பெற்ருர்! நெடுந்தூரம் செல்வதற்கு
முன்னி முயன்ருர்க்கும் முன்தோன்றிப்—பன்னரிய

வையகத்துப் பண்டமெலாம் வாரிச் சுமந்துகொண்டு
கையகத்துச் சூத்திரத்தால் கத்துகடல்—மையமெலாம்

நீரைக் கிழித்தோட நீண்ட பெருங்கப்பலுடன்
பாரைப் பதித்தோடப் பாங்கான—நீராவி

எந்திரங்கள் வாகனங்கள் எங்கும் பறந்துசென்று
வந்திறங்க வானூர்தி மண்டமரில்—வெந்திறலார்

கொல்லுமணுக் குண்டு குவலயத்தைத் தாண்டிவெளி
செல்லும் பெருவாணம் தேடவைத்தாய்!—பல்வகையாம்

பேராற்றல் வாய்ந்த பெருங்கடவுட் கொப்பான
சீராற்றல் வேண்டித் திரிந்தார்க்குக்—காரேற்ற

மின்வலியைக் கையகத்தில் மேவவிட்டு மக்களுக்குத்
துன்னிருளை ஓட்டச் சுடர்விளக்கும்—பன்னூறு

செய்தொழிலும் ஊக்கும் திறந்தந்தாய்! "பொய்வாழ்வு
பொய்யுடல் பொன்ருப் பெருந்துயரம்—செய்கின்ற

வல்வினையை மாற்ற மனிதரால் ஆகாது"
தொல்வினை என்றயர்ந்த சோம்பரெலாம்—பல்விதமும்

தேறித் தெளியத் தினந்தோறும் ஒவ்வொன்ருய்க்
கூறிப் புதுமை குவித்துவிட்டாய்!—மாறிவரும்

காலம் கணிக்கக் கடல்மூழ்கத் தூரத்து
ஞாலம் கடந்தேற யந்திரங்கள்!—காலமெலாம்

உன்னையே நம்பி உருன்ருர் நினைத்ததெலாம்
முன்னுதவி செய்து முடிப்பித்தாய்!—என்னிறையே!

சிந்தனைக் காட்டில் செழித்துவரும் தீம்பயிரே!
"நிந்தனைக் காட்டில் நிலைகெட்டு—முந்தையோர்

கொற்றக் குடைநிழலில் கோளரிபோல் வீற்றிருந்த
வெற்றித் திருநாட்டை வீணர்கைப்—பற்றவிட்டுத்

தன்மானம் வீரம் தனிப்பெருமை எல்லாம்போய்
புன்ஞயின் காலில் புலிவணங்கும்—தன்மைபோல்

ஈன வடவர் அரசோச்ச ஏற்றமிக்க
மான மறவர் மதியிழந்து—கூனராய்த்

தாள் வணங்கி வாழ்கின்ருர் தண்டமிழர்!" நீள்தடக்கை
வாள்விளங்க நெஞ்சில் மறம்விளங்கத்-தாள்வலியால்

சூள்விளங்க வாயில் சுடர்விளங்கச் செங்கண்ணில்
தோள்விளங்க மாமலைபோல் தோன்றுமந்த—நாள்விளங்க

மாற்ருர் தலையுருள வாழ்வின் தளையுருள
வேற்ருர் கொடியுருள விண்ணுயர—ஏற்றுகின்ற

வெற்றிக் கொடியாட வீரர் மகிழ்ந்தாட
சுற்றிச் சுழன்ருடத் தோகைநல்லார்!—கற்றறிந்த

நாவால் புகழ்நிறுவி நல்ல தமிழ்நிறுவும்
பாவாணர் போர்ப்பரணி பாடவே!—ஓவாத

நல்வாழ்வு காண்பதற்கு நற்றமிழர் தூதாகச்
செல்லாயோ பேரறிவே! சென்றங்கே—சொல்லாயோ?

யாரிடம் என்பாய் அறைகுவேன் கேளறிவே!
"ஓரிடமும் நாடுமில்லார் ஒண்டவந்தார்—பாரிடத்தில்

வான்ருேய் இமயமுதல் வாழ்ந்த பெருங்குடியாம்
சான்ருேர் திராவிடரைச் சாய்த்தொழித்தார்—தேன்தோயும்

விந்திய எல்லைவரை வீழ்த்திக் கொலைகாரர்
நொந்த குடியாகி நோகவிட்டார்—தந்திரமாய்

சிங்கக் குகைப்புகுந்த தீயவிடப் பாம்புபோல்
மங்கா மறக்குலத்தை மாய்த்தாரே!"—இங்கிதமாய்

நீதிக் குறைவாக நீணிலத்து மக்களெலாம்
சாதிப் பிரிவாக்கும் சாத்திரங்கள்—போதித்தார்!

"ஒன்றே குலமாம் ஒருவனே தேவனும்"
என்றே இருந்தநெறி எல்லாம்போய்—ஒன்ருகத்

தொட்டால் அருகிருந்து சோறுண்டால் வீதிவழிப்
பட்டால் நிழலிற் பயின்ருலும்—கெட்டாராம்!

பன்றிநாய்க் கில்லாத பாதகக் கொள்கையெலாம்
நின்றுலவச் செய்தார் நெறிகேடர்!—குன்றின்

உலையாக் குலத்தாரின் உள்ளத்தை மாரு
அலைபாய் கடல்போல ஆக்கி—நிலையாக

வாழும் வழிகண்டார் வன்னெஞ்சர் தென்னவரைத்
தாழும் குழிகண்டு தள்ளினுர்—ஊழிநாள்

(தொடரும்)

உரிய காலத்தில் வரும்

பிப்ரவரி முல்லையில்

கவிதைகள் :

வாய்திறந்து பேசவந்தேன் ஒன்று கொடுத்தார் : கண்ணதாசன்
என் நிலை காண்பாரோ : 'அருப்பை கிழார்'

கதைகள் :

காதல் கைகூடி சாதல் : 'வல்லபன்'
மானங்காத்த மற்போர் : 'மாசரா'
வீராங்கனை : இராம. கண்ணப்பன்
எழிலரசி கிளியோபாட்ரா : 'நாகநாதன்'
இரண்டு குண்டுகள் : ந. தாமோதரன்

கட்டுரைகள் :

தோதவ மகளிர் மரபு : உதகை பொன்னழகன்
மற்றும் பல

சிறப்புப்பகுதி :

தேறுவீர்களா வினுவும் விளக்கமும்
இன்று இது கேலிக்குரியது
விகடத்துணுக்குகள்
நீதி நெறிகள்

இன்னும் பல இடம் பெறுகின்றன.

இத்தனைக்கும் விலை 25 காசு.

உங்கள் இதழுக்கு முந்துங்கள்

விற்பனையாளர் இல்லாத ஊர்களில் விற்பனையாளராக விரும்புவோர் விண்ணப்பிக்க.

'முல்லை' சென்னை-6.

காட்சி 1. இலங்கையிலுள்ள கந்தக்காடு

குறவர்குல அழகியான அசோகமாலா, சேலை நீந்த, சேல்-விழி நீந்த - செக்கச்சிவந்த உடல்நீந்த - குளித்துக்கொண்டிருக்கும் அழகைப் பார்த்து விழித்துக்கொண்டு நிற்கிருன் சாலி. அந்நிய ஆடவனெருவன் தன்னை இமைகொட்டாது நோக்குவதை அறிந்த அசோகமாலா, ஆத்திரத்தோடும் அவசத்தோடும் கரையேறி வருகிருள்.

அசோகமாலா : ஏனய்யா ஆளை விழுங்குவதுபோல் அப்படிப் பார்க்கிறீர் ?

சாலி : அழகை விழுங்கத்தானே பெண்ணே - விழிகளே இருக்கின்றன.

மாலா : ஒரு பெண் குளித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து இப்படி இளித்துக்கொண்டு நிற்கிறீரே-உமக்கு வெட்கமாக இல்லை.

சாலி : ஆசை வெட்கமறியாது என்பார்களே - அது உனக்குத் தெரியாதா ?

மாலா : அது எனக்குத் தெரியும். இப்படி வழிமறித்து வம்பு பண்ணும் ஆடவருக்கு என்ன கிடைக்குமென்று உமக்குத் தெரியாதா ?

மாலா : அடடா - எழுந்து என் பின்னல் வாருங்கள். சாப்பிட ஏதாவது தருகிறேன்.

சாலி : முதலில் அதைச் செய்யம்மா.

[மாலா செல்ல-சாலி அவளைப் பின்தொடர்ந்து செல்கிருன்]

காட்சி 2. அசோகமாலாவின் குடில்

சாலியை அழைத்துக்கொண்டு வந்த மாலா-தூங்கிக்கொண்டிருக்கும் தன் தந்தையை அவசரமாக எழுப்புகிருள்.

மாலா : அப்பா - அப்பா, எழுந்திரப்பா - ஐயோ சிக்கிரந்தான் எழுந்திரேன்.

கங்கன் : ஏம்மா ?

மாலா : ஐயோ பாவம்பா - பசியா இருக்கு தா(ம்) எங்கிட்டக் கேக்குருரு.

கங்கன் : யாரு.

மாலா : அங்கபாரு (வாசற்படியிலிருந்த சாலியைச் சுட்டிக்காட்டுகிருள்)

கங்கன் : ஐயா-என்ன வேணும் ?



தியாகன்

சாலி : பெண்ணே !

மாலா : அட பேச்சை நிறுத்தும்.

சாலி : சரி நீயே பேசு.

மாலா : தனியாக இருக்கும் ஒரு பெண்ணிடம் வந்து இப்படித் தவருகப் பேசுகிறீரே-இது உமக்கே சரியாகப் படுகிறதா ?

சாலி : 'படும்' என்றுதான் நினைக்கிறேன். நீ தனியாகவா இருக்கிருய் ?

மாலா : பிறகு ?

சாலி : நாம் இணையாகத்தானே இருக்கிருேம்.

மாலா : என்னது ?

சாலி : நான் உனக்குத் துணையாக இருக்கிறேனே என்று சொல்லுகிறேன்.

மாலா : ஐயா வீரரே !

சாலி : அடடா-கூடுடைந்து சிந்தும் தேன்போல் இருக்கிறது உன் சொற்கள். நீ பேசு பெண்ணே.

மாலா : இந்த நையாண்டிப் பேச்சையெல்லாம் உங்கள் நாட்டோடு வைத்துக்கொள்ளுங்கள்.

சாலி : ஏன் ?

மாலா : இது-ஆளை மயக்கும் மங்கைகள் வாழும் நாடல்ல-அடித்து விரட்டும் வேங்கைகள் வாழும் காடு. நான் ஒருத்தியாக இருந்தாலும் குறத்தியாகப் பிறந்தவள். புரிகிறதா - வழியை விடும்.

சாலி : நீ குறவர் குலக்கொடியா ? பெண்ணே...

மாலா : ஏன்-வாயால் சொன்னுல் கேட்கமாட்டீரா ?

சாலி : ஏன் கோபித்துக்கொள்கிருய்? நீ பெண்ணல்லவா உனக்குப் பஞ்சுபோன்ற மென்மையானநெஞ்சல்லவா இருக்கவேண்டும். குறக்கொடியே கொஞ்சங் கருணைகாட்டேன்.

மாலா : எதற்கய்யா ?

சாலி : என் பசிக்கு.

மாலா : பசியா ?

சாலி : ஆமாம்-வேட்டைக்கு வந்தேன். வழி தவறிவிட்டேன். பசி-தாகம்-களைப்பு. தாங்க முடியவில்லை. (அப்பாடா-என்று கீழே அமர்கிருன்)

மாலா : ஐயயோ-ஏனய்யா இதை முன்பே சொல்வது தானே.

சாலி : நீ குளித்துக் கொண்டிருக்கும்போதே வந்து கேட்டால் கோபித்துக்கொண்டு விடுவாயே என்றுதான் காத்துக் கொண்டிருந்தேன். நான் காத்துக் கொண்டிருந்ததைப் பார்த்துக்கொண்டிருந்ததாக அல்லவா நீ நினைத்துக்கொண்டு விட்டாய்.

சாலி : அருந்துவதற்கு எது இருந்தாலும் கொடுங்கள்.

கங்கன் : குடிக்கிறதுக்கா-நாங்க குறச் சாதியாச்சுதுங்கள-எங்கிட்ட நீங்க தண்ணீர் வாங்கிக் குடிக்கிறதுகூடப் பாவமாச்சுதுங்கள-எப்படித் தர்ரது.

சாலி ; பெரியவரே - உலகிற்கே நீதி சொன்னவன் போதிமர வித்தகன் புத்தன். ஆட்டுக்கார இடைச் சிறுவன் மட்டும் அவருக்குப் பால் கொடுத்துக் காப்பாற்றியிராவிட்டால் - புத்தனின் பொன்னுன தத்துவங்களை இந்த உலகு இழந்திருக்கும், பகவான் புத்தனைவிடவா அவன் பக்தன்பெரியவன். உயிரைவிடவா குலம் பெரிது. தயங்காதீர்கள் பெரியவரே.

கங்கன் : மாலா...

மாலா : கொண்டுவர்ரப்பா.

[சுரைக்குடுக்கையில் கம்புக்கஞ்சி கொண்டுவந்து கொடுக்கிருள் மாலா. அதை ஆவலோடு வாங்கிப் பருகுகிருன் சாலி]

காட்சி 3. ஈழத்தரசன் துட்டகமனுவின் அரண்மனை.

புத்திரசோகத்தால் மனமுடைந்து புலம்புகிருன் துட்டகமனு.

கமனு : ஐயோ மகனே சாலி-நீ எங்கேயடா இருக்கிருய் ? எங்கே இருக்கிருய் ?

அமைச்சர் : அமைதிகொள்ளுங்கள் அரசே-இளவரசரை எப்படியும் கண்டுபிடித்துவிடலாம்.

கமனு : எப்படிக் கண்டுபிடிப்பீர் அமைச்சரே - எங்கே கண்டு பிடிப்பீர் ? பெற்றவனுக்கல்லவா வருத்தம் தெரியும். மற்றவனுக்கு என்ன தெரியும் ?

அமைச்சர் : அரசே.

கமனு : வேட்டைக்குச் செல்கிறேனென்று காட்டிற்குச் சென்ற சாலி விடு திரும்பவில்லையே இன்னும். பறந்துவிட்டதே நாட்கள் பத்து. என் மகன் எங்கே போனுன் ? என்ன ஆனுன்?

அமைச்சர் : அரசே.

கமனு : இளவரசனென்ன குழந்தையா ? வழிதவறி அலைவதற்கு. ஆழிசூழ் இலங்கையே கதிகலங்கிக்கொண்டிருக்கும் நேரமல்லவா இது. கொள்ளையடிக்கும் கள்வர்கள் ஒரு பக்கம். என் ஆட்சியையே கவிழ்க்கச் சூழ்ச்சி செய்யும் அரசியல் சதிகாரர்கள் ஒரு பக்கம்-இதற்கிடையில் என் மகனைப் பத்து நாட்களாகக் காணவில்லை. எப்படித் தாங்கமுடியும் அமைச்சரே-இதை என்னுல் எப்படித் தாங்கமுடியும் ?

அமைச்சர் : அரசே.

கமனு : தடியர்கள்-தளபதிகளாம்-அமைச்சர்களாம். என் மகனைத் தனியே விட்டு விட்டு இப்போது ஓடுகிருர்களாம் - தேடுகிருர்களாம்-முட்டாள்கள். அமைச்சரே சாலியைத் தேடிக் கண்டு பிடிக்க நானே காட்டுக்குப் புறப்படுகிறேன்.

(8-ம் பக்கம் பார்க்க)

[முதற் பக்கத் தொடர்ச்சி]

இடையில் எப்படித் திடீரென்று கருப்புக்கொடிபிடிப்பது?'' என்று தத்துவ ரீதியாகவே கேட்டார்கள். அதற்குச் சம்பத் அவர்கள், “அரசியலுக்கு இது நியாயமே. இப்போது வருகிற இராசேந்திரர், தமிழகம் அமைதியாக வரவேற்பளிப்பதைப் பார்த்து விட்டுத் திரும்பினல், என்ன நினைப்பார்? நமக்கு என்ன பதில் அனுப்புவார்? நம்முடைய எண்ணத்தை அவர் கண்ணெதிரே காணும் வாய்ப்பு அவருக்கு எப்போது பிறகு ஏற்படும்?” என்ருர். பிறகு அண்ணு அவர்கள் “நீங்கள் எல்லோரும் சேர்ந்து இம்முடிவினை எடுத்தாலும், எனது ஆட்சேபணையை எழுதிக்கொள்ளுங்கள்'' என்று வாதித்தார்கள்.

கடைசியில் அண்ணு அவர்களும் இணங்கி வந்தார்கள். கருப்புக்கொடித் தீர்மானம் உருவாயிற்று. அதன் எதிரொலி எவ்வளவு உற்சாகமாக இருந்தது என்பது நமக்குத் தெரியும். ஆனல் அதிலும் அண்ணு அவர்கள் நடிகர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வந்ததை மறந்துவிடுவதிற்கில்லை. கட்சிக் கூட்டங்களில் கைதட்டல் பெறுவதற்கும், கொடியின்கீழே விளம்பரம் தேடுவதற்கும், நடிகர்கள் வாய்ப்புப்பெறும்போது-போராட்டத்தில் மட்டும் அவர்கள் விதிவிலக்குப் பெறுவானேன்? கோடம்பாக்கம் இந்தி எதிர்ப்ப மாநாட்டில், அனைவருடைய கவனமும் டில்லியில் உள்ள பயங்கரச் சக்தியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தது. ஆனல் அண்ணு அவர்கள் “கலையுலகத்தில் நமக்கெதிராக ஒரு பயங்கரச்சக்தி வளர்ந்து வருகிறது. அதனை ஒழிக்க வேண்டுமென்ருல்நடிகர்களுக்கு விதிவிலக்கு வேண்டும்'' என்று பேசியது பலருக்கும் அதிர்ச்சியைச் கொடுத்தது.

அதன் பிறகு, புதிய பொதுக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. கட்சியின் நடைமுறைகளைப் பார்த்து இதே வழியில் இயக்கம் இயங்குமானல் நோக்கம் நிறைவேறுவது கடினமே என்பதை உணர்ந்து கொண்ட நான், சத்தமில்லாமல் மரியாதையாக ஒதுங்கிக்கொள்ள விரும்பினேன். ஆனல் கட்சியில் பலப்பட்டுவரும் இடதுசாரி அணியினர்,இந்த ஒதுங்கல் கொள்கை தவருனது என்று எனக்கு அறிவுறுத்தினர்கள். தலைமை நிலையத்திற்கு என்னை அழைத்துக் கொண்டுபோய், மறுபடியும் உறுப்பினராகப் பதிவு செய்து வைத்தார்கள். நீங்கள் கண்டிப்பாகக் கேட்டுத் தீரவேண்டியது இதிலே அடங்கியிருப்பதால் இதை வெளியே சொல்கிறேன். ஏந்தப் பதிவுத்தாள் காரைக்குடிக்கு அனுப்பப்பட்டது. காரைக்குடிக்கே ஒரு தலைவர் போய், அந்தப் பதிவுத்தாளை திருப்பி அனுப்ப வேண்டாமென்றும், கண்ணதாசன் இத்தோடு ஒழியட்டுமென்றும் சொல்லிவிட்டு வந்தார். காரைக்குடி நண்பர்கள் என்னிடம் ஓடி வந்து வருத்தத்துடன் தெரிவித்தார்கள். நான் வருந்தவில்லை. நான் எதிலுமே வரவு செலவுக் கணக்குப் பார்ப்பதில்லை.

என் சேவை தேவையென்ருல், உறுப்பினராகாமலேயே அதைச் செய்யமுடியுமென்ற நம்பிக்கை எனக்கிருந்தது. பதவிகளைத் துச்சமாக மதிப்பது என் இயற்கைக் குணம். பதவியின்றிச் சேவையால் உயர்ந்தவர்களைப் பற்றி நான் நிறையப் படித்திருக்கிறேன். அதனல் அமைதியாக இருந்துவிட்டேன். (என் சொந்த நிலையை இடையில் சொல்ல வேண்டி வந்ததற்கு வருந்துகிறேன்) அடுத்துப் புதிய பொதுக்குழு சென்னையில் கூடியது. சென்னையிலும் வேறு இடம் கிடைக்காமல் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களின் நடிகர்சங்கத்திலேயே கூடியது. அங்கே சென்னை மாவட்டக் கழகத் தோழர்களே எம். ஜி. யாரால் அவமானப்படுத்தப்பட்டார்கள். நாம் செய்த பாவத்தை நாம்தானே அனுபவிக்கவேண்டுமென்று, அவமானப்பட்ட தோழர்கள் திரும்பிவந்தார்கள்.

பொதுக்குழு, பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுத்தது. அண்ணு அவர்கள் பொதுச் செயலாளரானது எல்லோருக்குமே மகிழ்ச்சிதான். இப்போது “சம்பத் அண்ணு தலைமையைப் பறிக்க முயற்சிக்கிருன்'' என்று குற்றஞ்சாட்டுபவர்கள் அப்போது அண்ணு அவர்களை முன்மொழியவில்லை. சம்பத் கேட்டுக்கொண்டார்; மதியழகன்தான் முன்மொழிந்தார். ஞர்களோ என்னவோ, குழப்பம் அடங்காமல் தொடர்ந்தது, சம்பத்தை ஆதரிப்பவர்கள் கேலி செய்யப்பட்டார்கள். தானினைத்த முப்பாகக் காரியத்தைத் தொடங்கினர்கள். எந்த நிதியையும் பொதுச் செயலாளர் வாங்கிப் பொருளாளரிடம் ஒப்படைப்பதுதான்ஜனநாயகமரபு. இங்கே பொருளாளர் பொதுச் செயலாளருக்கு வேண்டியவராகிவிட்டதால்-அவர் பெயரிலேயே அறிக்கைகள் வரத் தொடங்கின. அவர் பெயருக்கே நிதி அனுப்பவேண்டுமென்று விளம்பரங்கள் போடப்பட்டது. இது எந்தக் கட்சியிலும் இல்லாத அதிசயம். நமது இயக்கத்திலேயே இதற்கு முன்னல் இல்லாத அனுபவம்.

கூட்டுப்பொறுப்பு கூட்டுப் பொறுப்பு என்று சம்பத்சொல்லி வந்த கருத்து, கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டும், புதிய இரத்தம் கட்சியில் ஓட வேண்டுமென்று ஆசைப்பட்டவர்கள்,சற்றுத் தொய்ந்ததொனியில் பேசினர்கள். இருப்பினும், கட்சிப்பூசல் வெளியில் தெரியக் கூடாது என்ற அதே கொள்கையோடு, தோழர் சம்பத் அவர்கள், அண்ணு விரும்பக்கூடிய ஆட்களையே செயற்குழுவிற்குத் தேர்ந்தெடுத்தார்கள். கருணு நிதியைக் கேட்டுக் கேட்டு, ஒவ்வொரு பெயரையும் எழுதினர்கள். தன் தீவிரக் கொள்கையை ஆதரிக்கின்ற நண்பர்கட்கு வெறும் சமாதானம் மட்டுமே சொன்னர்கள். அந்த வழியில் ஆட்சிமன்றக்குழு உட்பட-ஒவ்வொரு குழுவிலும், அண்ணுவால் விரும்பப்படுபவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டார்கள். அதையும் கட்சிக் கட்டுப்பாட்டில் நாட்டங்கொண்ட சம்பத் அவர்களே செய்தார்கள்.

இவ்வளவையும் சம்பத் அவர்களின் பலவீனமென்று கருதி செயலளவில் தோற்கடிக்கப் பட்டது. இது ஒரு பகுதியினருக்குப் பெருங்கவலையைக் கொடுத்தது. சென்ற தேர்தலில் தேர்தல்நிதி செலவழிக்கப்பட்ட முறை கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இதன் நடுவே, அண்ணு அவர்கள் தனது திராவிடநாடு இதழில், “எல்லோரும் இந் நாட்டு மன்னர்'' என்ற தலைப்பில், ஐந்து கட்டுரைகளைத் தொடர்ச்சியாக எழுதினர்கள். கட்சித் தொண்டர்களுக்கு அது புரிந்ததோ இல்லையோ-மேல்மட்டத்திலிருந்தவர்களுக்கு அது நன்ருகப் புரிந்தது. அண்ணு அவர்கள் அதை மறுத்தபோதிலும், நிகழ்ச்சிகளை நன்ருக அறிந்த மற்றவர்கள், அது சம்பத்தைக் கேலி செய்கிறது என்பதை மறுக்க முடியவில்லை. இதுபற்றிஅண்ணு அவர்களிடம் சம்பத்தே பேசினர். “இதற்கு நான் பதிலெழுதப் போகிறேன்'' என்றும் சொல்லிவிட்டு வந்தார். எழுதினர்; தென்றல் வெளியிட்டது.

தன் தத்துவங்களைக் கேலியிலிருந்து காத்துக் கொள்ள ஒருவர் முயற்சிப்பது, எவ்வகையில் குற்றமோ தெரியவில்லை. அண்ணு அவர்கள் அதைப் பெரிது படுத்தாமல் இருந்தும், வேறு சிலர் ஆவேசமடைந்தது போல் நடிக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் விஷமிகள் இல்லாமலுமிருக்கலாம்-சந்தேகத்துக்கு இடமில்லாத பேர்வழிகளாகவும் இருக்கலாம். எந்திரம் செய்யப்பட்ட காலத்திலிருந்தே இருப்பவர்களாகவும் இருக்கலாம்.

ஆனல்,சம்பத் கட்சியில் இருப்பது தங்கள் சுக வாழ்க்கைக்கு ஆபத்து என்று கருதுபவர்களாக அவர்கள் இருந்தார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

அதற்குமேல் நிகழ்ந்தவற்றையும் நான் மனம் விட்டே பேசிவிட ஆசைப் படுகிறேன். ஒருவாரகாலம் நாடுமுழுவதிலும் சுற்றி அவர்கள் ஆள் சேர்க்கத் தலைப்பட்டார்கள். ஆளென்ருல் பொதுக்குழுஉறுப்பினர்கள் மட்டுமல்ல, அடியாட்களுங்கூட. இதை எப்படி நான் சொல்கிறேனென்ருல், பொதுக்குழுக் கட்டடத்திற்கு வெளியே நின்று கொண்டே அவர்கள் சத்தம் போட்டுச் சொன்னர்கள். “நாங்கள் மதுரையிலிருந்து அடிப்பதற்கு ஒத்திகைபார்த்துக் கொண்டு வந்திருக்கிருேம்.'' என்ருர்கள்.

அடுத்த இதழில் முடியும்.

அழகப்பா தமிழ் மன்றம்

காரைக்குடி

கவிதைப் போட்டி முடிவு.

தமிழகக் கல்லூரிகள் அனைத்துக்கும் பொதுவாக நடத்திய கவிதைப் போட்டியில் ஐம்பத்தைந்து கவிதைகள் பங்கு பெற்றன.

இதில் முதற்பரிசை திரு. கா. வேழவேந்தன், பி. ஏ. (சட்டக்கல்லூரி, சென்னை) அவர்களும், இரண்டாம் பரிசை திரு. மீ. இராசேந்திரன், பி. ஏ. (தியாகராசர் கல்லூரி, மதுரை) அவர்களும், மூன்ரும் பரிசை திரு. க. இராமையன், பி. ஏ. (அழகப்பர் கல்லூரி, காரைக்குடி) அவர்களும் பெற்றனா. திரு. அ. அறிவொளி (கரந்தைக் கல்லூரி) அவாகளும், திரு. தி. கு. நடராசன், பி. ஏ. (தியாகராசர் கல்லூரி, மதுரை) அவர்களும் பாராட்டைப் பெற்றனர்.

தமிழ் மன்றம், கவிஞர் கண்ணதாசனின் அன்னை விசாலாட்சி ஆச்சி அவர்களின் நினைவாக நடத்திய இப்போட்டியிற் கலந்துகொண்ட அனைத்துக் கல்லூரி மாணவர்கட்கும், தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. பரிசு பெற்ற கவிதைகள் “தென்றல்'' இதழில் வெளியாகும்.

அருந்தமிழ்ப் புலவரும்

ஆருயிர் மருந்தும்

மக்கள் உயிர் வாழ வேண்டுமானுல், உணவு மிக மிக அவசியம். கலை இல்லாமல் வாழ்க்கை நடத்திவிடலாம். காவியம் பாடாமல் வாழ்நாளைக் கடத்திவிடலாம். ஓவியம் தீட்டாமல்கூட உயிர் வாழ்ந்துவிடலாம். பொருளாதாரத் துறையின்மூலம் துயர்ப்பட்டாலுங்கூட, பொறுமையைக் கடைப்பிடித்து பொறுப்பைத் துணைக்கழைத்து, வாழ்ந்து காட்டிவிடலாம். ஆனுல் உணவு இல்லாமல் வாழ முடியாது; வாழவே முடியாது.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்று பொதுவுடைமைத் தத்துவம் பேசுபவர்கள் அனைவரும் உணவின் குணத்தை நன்ருக அறிவார்கள். காங்கிரசு ஆட்சியினர் தங்களது ஆட்சிக்காலத் தொடக்கத்தில், உண்ணும் உணவை அளந்து கொடுக்க ஆரம்பித்ததும் 16 அவுன்ஸ் 6 அவுன்சாகச் சுருக்க ஆரம்பித்ததும், அதன் விளைவாக 'ஆறவுன்ஸ் ஆட்சி' என்று பொதுமக்களும், மாற்றுக் கட்சியினரும் அவர்களைக் கேலி செய்ய ஆரம்பித்ததும் நாடறிந்த உண்மை.

ஒவ்வொரு மனிதனும் நாள்முழுதும் உழைத்து ஊதியம் தேடுகிருனே. எதற்கு? உல்லாச புரியில் உலவுவதற்கா? இல்லை! உன்னதமான முறையில் திரிவதற்கா? இல்லை, இல்லை! பின் எதற்காக! உடலில் ஒட்டிக்கொண்டிருக்கும் உயிரைப் பாதுகாப்பதற்காக! செல்வத்தின் தத்துப் புத்திரர்களாக இருந்தாலும் சரி, வறுமைச் செல்வியின் வாரிசுதாரர்களாக இருந்தாலும் சரி, எல்லோருக்கும் முதல் பிரச்னை 'இடும்பைகூர் வயிறுக்கு' நாள்தோறும் படையல் தருவது தான்.

வயிற்றின் தேவையை உதறித் தள்ளுவது, ஒருவகைத் தியாகமாக மதிக்கப் படுகிறது இந்த உலகத்தில். பொதுவாழ்வுத் துறையில் அக்கறை கொண்டவர்கள், தங்கள் கோரிக்கைக்கு அரசினர் செவி சாய்காவிட்டால், உண்ணு நோன்பு ஏற்று உயிரை விடச் சித்தமாகின்றனர். அவர்கள் உண்ணுவிரதம் இருக்கக் கூடாது என்று அரசினர் அவர்களை வேண்டுகின்றனர்; அவர்கள் மறுத்து விட்டால், பின்னர் அரசினர் சட்டத்தைத் துணைக்கழைத்து, உண்ணு நோன்பு இருப்பவர்களைக் கைது செய்து தற்கொலை செய்து கொள்ள முயன்றதாகக் குற்றம் சாட்டி, தண்டனையும் வழங்குகிருர்கள். உண்ணு விரதம் பூண்பவர்களைப் பாராமுகம் செய்து, அவர்களின் கோரிக்கையைக் கேட்காமலும், தமிழ் உணர்வு இல்லாமலும், அவர்களைக் கொன்ருெழிக்கும் அமைச்சர்களும்தென்னுட்டில் உண்டு.

அது விதிவிலக்கு!

உயிர்வாழ உணவு அவசியம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். தமிழ் நாட்டுக் கட்சிகளுக்குள், வேறு எந்தக் கொள்கையில் வேண்டுமானுலும் மாறுபாடு இருக்கலாம். ஆனுல் உணவுக்கொள்கையில் மட்டும் மாறுபாடு கிடையாது; உணவு இல்லாமல் உயிர்வாழ முடியும் என்று பாட்டாளியின் கட்சியும் கூருது, பணக்காரர்களின் கட்சியும் கூறமுடியாது.

எல்லோராலும் வரவேற்கப்படும் உணவின் பெருமையே தனி. சாதாரணமாக, நம்மவரின் வீடுகளில், உணவு தயாராகச் சிறிது நேரம் தாமதமாகி விட்டால் கூட பசிகொண்ட சில வயிறுகள் தாங்கிக் கொள்ள முடியாமல் தவிக்கின்றன. ஓங்காரக் கூச்சலிட்டு, ஊழித் தாண்டவம் ஆடி கலகத்தையும், குழப்பத்தையும் வீட்டில் விளைத்து வரும் சில பசிகொண்ட பெருமக்களை நான் கண்டிருக்கிறேன். பசி கொண்டவயிறுகள் கோபம் என்ற 'டானிக்'கை உட்கொள்ளவே, அது கரங்கள் என்ற வேலையாட்களுக்கு வலுவைக்கொடுக்க ஆரம்பிக்கிறது. உடனே வேலையாட்கள் தங்கள விருப்பம்போல் விளையாட முற்படுகின்றனர். அதன் விளைவு, மனைவிக்குக்காயம்-தாய்க்குச் சரியான அடி குழந்தைகளுக்கு ஆபத்து. இத்தனையும் ஏற்படுகின்றன. 'பசிவந்திடப் பத்தும் பறந்து போம்' என்பது பழமொழி. பசி, மாபாதகம் கூடச் செய்யத் தூண்டும். நல்ல மனிதனின் எண்ணத்தில் திருடவேண்டும் என்ற நச்சு எண்ணத்தைத் தூவுவதும் பசிதான் பூனையைக் கண்டாலும் புலி என்று எண்ணி நடுங்கும் கோழைகளைக்கூட, பசி, அரிவாள் எடுத்துப் பிறரைக் கொன்று ஒழிக்கும் கொலைகாரர்களாக மாற்றியிருக்கிறது.

குடிப்பிறப் பழிக்கும்
விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப்
பெரும்புணை விடூஉம்
நாணணி களையும்
மாணெழில் சிதைக்கும்
பூண்நகில் மாதரொடு
புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும்
பாவியது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்
கென்நா நிமிராது

என மணிமேகலையில் வரும் வரிகள் பசியின் கொடுமையை - தெளிவாக உரைக்கின்றன. பசி, ஒரு பிணியாகவும், அதைத் தீர்க்கத் துணைபுரியும் உண்டி 'ஆருயிர் மருந்தாகவும்' உருவகம் செய்யப் படுகிறது மணிமேகலை என்னும் மாபெருங் காப்பியத்தில்:

ஆற்றுநர்க் களிப்போர்
அறவிலை பகர்வோர்
ஆற்ரு மாக்கள்
அரும்பசி களைவோர்
மேற்றே உலகின்
மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து
வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர்
உயிர்கொடுத் தோரே

என்கிறது மணிமேகலை. பசிப் பிணியைத் தீர்ப்பது பெருந் தொண்டாக இருந்து வந்திருக்கிறது நமது பண்டைத் தமிழ்நாட்டில். அந்தப் பண்பின் சின்னங்கள்தான் இன்றும் பல ஊர்களில் காணப்படும் சத்திரங்களும், ஆங்காங்கே வழிப்போக்கர்களுக்கு உணவு வழங்கிவரும் பொதுத் தொண்டுகளும்!

அந்த நாட்களில், புலவர் பெருமக்கள் தங்கள் பரிசில் வாழ்க்கையை நடத்த ஒவ்வோர் ஊராகச் சென்று திரும்புவார்கள். வாகன வசதிகள் இல்லாத அந்த நாட்களில் அவர்களுக்கு உதவி புரிந்து வந்ததெல்லாம் அவர்களுடைய கால்கள்தான். ஆதவன் எழுவதற்கு முன்னுல் புறப்பட்டு, சில நாழிகைகள் நடந்து வெய்யில் கடுமையாகும்போது பக்கத்தில் காணப்படும் சத்திரத்தில் தங்கி உணவு உண்டு, பகற்பொழுதை அங்கேயே கழித்துவிட்டு, மாலையில் கதிரவன் மலை வாயிலில் விழுந்தவுடன் மீண்டும் பயணத்தைத் தொடங்கி, இரவு நேரத்தில் முடிந்தவரை நடந்து, அயர்வு வருங்கால் அருகில் காணப்படும் சத்திரத்தை நோக்கிச் சென்று, உணவு உண்டு, இரவைக் கழித்து, விடிவதற்குமுன் மீண்டும் பயணத்தைத் தொடங்கி, பிரயாணத்தை முடித்து வந்தனர் புலவர் பெருமக்கள். புலவர்களுக்கு இதுபோன்ற பிரயாணம் வாடிக்கையானது. வாடிக்கை நிகழ்ச்சிகளில், வேடிக்கைகளும், வேதனைகளும் நேரும் என்பதை காளமேகத்தின் கவிதை நமக்குப் புலப்படுத்துகிறது.

காளமேகம் ஒருமுறை புரவலர் ஒருவரைச் சந்திக்கத் தஞ்சைக்குச் சென்றுகொண்டிருந்தார். பல காதங்களைக் கடந்து வந்து விட்டார்; என்ருலும் அவர் செல்ல வேண்டிய நகர் இன்னும் வந்த பாடில்லை. அப்போது நண்பகல் நேரமானபடியால், அருகில் உள்ள ஊர்ச் சத்திரத்தில் தங்கி, உணவு உண்டு, இளைப்பாறிச் செல்லலாம் என்ற முடிவுடன் வேகமாக நடந்தார். காட்டுப் பாதையை விட்டு, ஊருக்குச் செல்லும் பாதையில் நடந்தார். ஓலப் பெருங்கடல் நீல வண்ணம் காட்டி அவரை வரவேற்றது. மக்களின் பரபரப்பான நடவடிக்கைகள் அவர் கண்களில் பட்டது. பௌத்த ஆலயத்தின் மணி ஓசை அவர் காதுகளில் விழுந்தது. தான் நாகைப்பட்டினத்துக்கு வந்திருக்கிருேம் என்பதைத் தெரிந்து கொள்ள அவருக்கு நெடுநேரம் பிடிக்கவில்லை. சத்திரம் இருக்கும் இடத்தை விசாரித்தார். ஒரு வழியாக காத்தான் சத்திரம் என்னும் புகழ்பெற்ற சத்திரத்தைத் தேடிக் கண்டு பிடித்துவிட்டார். அங்கே உள்ள ஊழியர்கள் புலவர் பெருமகனை அன்புடன் வரவேற்றனர். பளிங்குத் தரையில் பாய் விரித்தனர்; பைந்தமிழ்ப் புலவரைப் பாங்குடன் அமரச் சொல்லி வேண்டினர்; அவரும் அமர்ந்தார்; அவ்வளவு தான்; அதன் பின்பு அவர் இருக்கும் பக்கத்தில் எந்த ஊழியரும் வரவில்லை.

புலவர் வந்து நெடுநேரம் ஆயிற்று; அவருக்கோ, அங்கே தங்கியிருக்கும் ஏனைய சக வழிப்போக்கர்களுக்கோ, உணவு படைக்க எவரும் வரவில்லை. பாவம் புலவர்! உணவு நிலைமையைச் சற்றுஅலசிப்பார்த்தார். அங்கே, அதற்குரிய சூழ்நிலைகளையே காணவில்லை. மேல்த் திசையைப் பார்த்தார். மாலைக் கதிரவன், புலவரின் பசி நெருப்புக்குத் துணை புரிவதுபோல் நெருப்பு வண்ணத்தைத் தெளித்தபடி மாமலையின் பின்புறத்தில் மறைந்துகொண்டிருந்தான். அப்போது சத்திரத்தில் ஏதோ பரபரப்புத் தெரிந்தது; சில ஆட்கள் அரிசி முட்டையைச் சுமந்து வந்து கொண்டிருந்தார்கள். ஒரு மூலையில் போட்டார்கள். சமையல் இலாகாவைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் வந்தார்; முட்டையைப் பிரித்தார்; சமையலுக்கு வேண்டிய அளவு அரிசியை எடுத்துக் கொண்டு சென்ருர். இதை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த புலவருக்கு தைரியம் உண்டாயிற்று; இனிமேல் உணவு விரைவில் தயாராகிவிடும் என்ற எண்ணம் அவருக்கு உற்சாகத்தைக் கொடுத்தது.

மாலை நேரம் விடை பெற்றுக் கொண்டு போய் வெகு நேரம் ஆகிவிட்டது. வீதியில் போவோர் வருவோர் தொகை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தது. இருளின் ஆட்சியும் சுவர்க்கோழிகளின் பின்னணி இசையும், இரவு நெடு நேரம் ஆகிவிட்டது என்பதைச் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன.

புலவர், இருந்த இடத்திலிருந்தே சத்திரத்து நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார்; அப்போது தான் அரிசியைக் கொழித்து கொதி நீரில் போட்டுக் கொண்டிருந்தார், 'நள-பீமர்களின்' சிஷ்யர்களில் ஒருவர். பாவம்! காளமேகத்துக்கு உயிரே போய்விடும்போலிருந்தது. என்ருலும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டார்; மனத்தைத் தேற்றிக்கொண்டார்; உலைப் பானையைப் பார்த்தார். அடுப்பில் சுடர்விட்டு எரியும் நெருப்புக் கோளத்தைப் பார்த்தார்; நெருப்பின் வேகம், உணவு விரைவில் தயாரிக்கப் பட்டுவிடும் என்ற நம்பிக்கையை அவருக்கு ஊட்டியது.

ஆனுல், என்ன அதிசயம்! அவரது நம்பிக்கை பயனற்றதாகிவிட்டது; நாழிகைகள் ஓடிக்கொண்டிருந்தன; முன் இரவு, நள்ளிரவாக மாறி, அதையும் தாண்டிச் சென்றுகொண்டிருந்தது. உணவுதான் தயாராகவில்லை.

இறுதியாக, ஒரு பரபரப்பு ஏற்பட்டது; சமையல் ஊழியர்கள் இலைகளை வரிசையாகப் போட்டுக்கொண்டே சென்ருர்கள். தூங்கிக்கொண்டிருந்த பலர், படுக்கையைச் சுருட்டி எறிந்து விட்டு, இலையை நோக்கி ஓடி வந்தனர்.

ஒரு வழியாக, காய், கறிகள் யாவும் பரிமாறப்பட்டன; அதன்பின் ஒருவன் ஒவ்வோர் இலையிலும் சோறு என்னும் ஆருயிர் மருந்தைப் படைத்துக் கொண்டு வந்தான். எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சித்தேவி திருநடம் புரிந்தாள். சமையல் காரர், காளமேகத்தின் இலையிலே ஓர் அகப்பை அன்னம் வைத்தார்; அதற்குள் எதிர் பாராத முறையில் தலையை நிமிர்த்திய புலவரின் கண்கள் வானத்தை நோக்கி வட்டமிட்டன. அங்கே விடிவெள்ளி தோன்றி விட்டது; புலவரையும் ஏனைய வழிப்போக்கர்களையும் உச்சி மீதிருந்து கேலிசெய்வது போன்றிருந்தது அதன் செயல். உடனே புலவர் வயிற்றுப் பசியை மறந்தார்; கவிதைப் பசி எடுத்து விட்டது அவருக்கு; காத்தான் தன் சத்திரத்தை ஆத்திரம் அடங்கத் திட்டினுர். அவரது ஆத்திரம் வெண்பாவாக மலர்ந்து விட்டது! அது, இது.

கத்துகடல் சூழ்நாகை
காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில்
அரிசிவரும்-குத்தி
உலையிலிட ஊரடங்கும்
ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்.

புலவரின் கோபத்தையும், சத்திரத்துப் பெருமக்களின் பொறுப்பற்ற தன்மையையும் அழகுத் தமிழில் வடித்துக் காட்டும் இந்த நகைச்சுவைச் செய்யுள் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற வள்ளுவனின் குறளுக்குச் சான்ருக அமைந்திருக்கிறது.

தமிழ்ப்பித்கன்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் : அரசே...
கமனு : பேச வேண்டாம். ஏற்பாடுகளைக் கவனியும்.

காட்சி 4. கந்தக்காடு.

வெள்ளிநிலா அள்ளி வீசிக்கொண்டிருக்கும் தங்க ஒளியில் குளித்துக்கொண்டிருக்கிறது கந்தக்காடு. கண்டு, காதலித்து, காரியத்தையும் வெகு சீக்கிரத்தில் முடித்து-புதுமணத் தம்பதிகளாகிவிட்ட மாலாவும்-சாலியும், ஒரு பாறைமீது அமர்ந்திருக்கின்றனர். காலை நீட்டி உட்கார்ந்திருக்கிறாள் அசோகமாலா. செழித்துத் திரண்ட அவளின் செவ்வாழைத் தொடைகளிலே முகம் புதைத்துப்படுத்திருக்கிறான் சாலி.

சாலி : மாலா...
மாலா :.........?
சாலி : சிட்டு.
மாலா : காது கேட்கிறது. சொல்லுங்கள்.
சாலி : இவ்வளவு விரைவில் நமது திருமணம் நடக்குமென்று நான் நினைக்கவே இல்லை.
மாலா : ஏன்? காதல் பண்ணிக்கொண்டே காலத்தைக் கடத்தி விடலாமென்று நினைத்தீர்களாக்கும்?
சாலி : சே-சே-உனது அப்பா இதற்கு ஒப்புக்கொள்வாரா என்று நினைத்தேன்.
மாலா : உங்கள் சாகசத்தால்தான் அவரையே சம்மதிக்கச் செய்துவிட்டீர்களே.
சாலி : எனது சாகசத்தால் மட்டுமா ?—ஏய்...
மாலா : சூ-என்ன இது ?
சாலி : காதல்-மாலா.
மாலா : ஹூம்......
சாலி : நீலவானையுந்தான் படைத்தானே-அதிலே நிலவையுந்தான் வைத்தானே - காணுதா? உன் கோலமுகத்தையுமேன் படைத்துவிட்டான் - இரு குண்டு விழியையுமேன் பதித்துவிட்டான்?
மாலா : என் கண்ணுக்குள்ளே நீங்கள் உங்களைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டுமல்லவா-அதற்குத்தான்.
சாலி : தவழும் தென்றலைத்தான் வீசவிட்டான் - அதற்குத் தனி மென்மையைத்தான் கலந்துவிட்டான். போதாதா? துவழும் உன் இடையை ஏன் இப்படி ஆடவிட்டான் - அதைச் சுருக்கி ஒடுக்கியுமேன் கொடுத்துவிட்டான்?
மாலா : உங்கள் கைகளுக்குள்ளே அகப்பட்டு இப்படி மூச்சுத் திணற வேண்டுமல்லவா-அதற்குத்தான்.
சாலி : மாலா...
மாலா : என்ன?
சாலி : தேனையுந்தான் படைத்தானே - அதிலே திதிப்பையுந்தான் கலந்தானே-பற்றாதா? இந்த மானையுந்தான் ஏன் படைத்தான்-மயக்கும் இதழையுந்தான் ஏன் கொடுத்தான்-ஏய் ஏன் கொடுத்தான்?
மாலா ; ஊஹூம். நான் சொல்லமாட்ட(ன்)-(ஓடுகிறாள்)
சாலி : நீ சொல்லவேண்டாம்...மாலா (சாலி அவளை விரட்டுகிறான்)

காட்சி 5. கந்தக்காடு.

தன் மகனைத் தேடிக் காட்டிற்கு வந்த கமனு, பகலெல்லாம் அலைந்து சோர்ந்து, இரவில் விளக்கு வெளிச்சத்தைக் கண்டு அசோகமாலாவின் குடிசையை நோக்கி வந்துகொண்டிருக்கிறான். அந்த நேரம் மாலாவை அணைத்தவண்ணம் ஓடி வந்துகொண்டிருந்த சாலி கமனுவின் கண்களில் பட்டுவிடுகிறான்.

கமனு : ஓடாதே-நில்.

(கமனுவின் கோபக்குரலைக் கேட்டதும்-சாலி அயர்ந்து அசையாது நிற்கிறான்)

மாலா : ஏன் இவர்களைக் கண்டு இப்படிப் பயப்படுகிறீர்கள்?
கமனு : ஓகோ-கோழையை வீரனுக்குகிறாயா? யார் பெண்ணே நீ?
மாலா : இவரின் மனைவி.
கமனு : மனைவியா ?
மாலா : ஆமாம்-ஏன்? நீங்கள் யார்? உங்களுக்கு எதற்கு இந்தக் கேள்வி—?
கமனு : நான் யார்?-என்னையா கேட்கிறாய்? வாடாத மலரணிந்து உன்னோடு கூடாத காதல் கொண்டானே இந்தக் கடைகெட்ட மடையன். அவனைக் கேள், கபட நாடகத்தை ஆட்டி வைத்த இந்தக் கள்ளச்சூத்ரதாரியைக் கேள்-நான் யாரென்று அவன் உனக்குச் சொல்லுவான்.
சாலி : அப்பா...
கமனு : அப்பா-அழைக்காதே அப்படி. ஈழநாட்டைக் கட்டியாண்ட சோழநாட்டு மன்னர்களையே ஓட ஓட விரட்டிய துட்டகமனுவின் மகனடா நீ?
மாலா : என்ன? இந்நாட்டு அரசரா தாங்கள்? இவர்?
அமைச்சர் : மாமன்னரின் மகன்-ஈழத்தின் இளவரசர் - வருங்கால மன்னர். இதைத் தெரியாதா பெண்ணே இளவரசரை நீ உன் கணவனுக்கிக்கொண்டாய்?
கமனு : அஹ்-ஹ-ஹா. எங்களுக்கு இது தெரியாமற் போய்விடுமென்று நினைத்துத்தானே நீ அவனைத் திருமணமே செய்துகொண்டாய்? இப்போது தெரிந்துவிட்டதே என்று ஏமாற்றப் பார்க்கிறாய் இல்லையா?
மாலா : நான் ஏமாற்றவில்லை அரசே - ஏமாந்துவிட்டேன். என் பெண்மையைக் கெடுப்பதற்காகவே உண்மையை மறைத்திருக்கிறார் உங்கள் மகன்.
கமனு : கதையளக்காதே பெண்ணே, என் மகனை - இந்நாட்டு இளவரசனை-குன்றாத பெருமை வாய்ந்த குலத்தில் வந்தவனை-கேவலம், குறவர் குலப்பெண்ணான நீ அபகரித்துக்கொண்டது மரணதண்டனை அளிக்கக்கூடிய மன்னிக்கமுடியாத அரசதுரோகம். குற்றத்தை ஒப்புக்கொள்கிறாயா நீ?
மாலா : ஒப்புக்கொள்கிறேன் அரசே. இளவரசர் கூறிய வார்த்தைகளை நம்பி-அவரை யாரென்று அறியாதுதான் நான் இந்தத் தவறைச் செய்துவிட்டேன். ஆனால் இளவரசரோ என்னை யாரென்று தெரிந்துதானே இதைச் செய்திருக்கிறார்.
கமனு : உண்மைதான் பெண்ணே இவன்-என்னையும் என் குலத்தையும் மட்டும் கெடுக்கவில்லை - உன்னையும் உன் கற்பையுமே கெடுத்துவிட்டான். தவறு செய்தவன் என் மகனாக இருந்தாலென்ன? வேறு எவனாக இருந்தாலென்ன—நீபெறும் தண்டனையைத்தான் அவனும் பெறவேண்டும்.
அமைச்சர் : அரசே...
கமனு : தீர்ப்பு முடிந்துவிட்டது. இனித் தண்டனையை நிறைவேற்றுங்கள்.
கமனு : வேண்டாம் அரசே-வேண்டாம். குறவர்குல மாலாவுக்காக உங்கள் குலக்கொழுந்தை நீங்கள் இழக்கவேண்டாம். என்னை இழந்தால் என் தந்தைக்கு மட்டுமே நட்டம். ஆனால் இளவரசரை இழந்தால் இந்த நாட்டு மக்களுக்கே அல்லவா நட்டம்-தவறு செய்தவள் நான்தான் தண்டனைக்குரியவர்களும் நான்தான். எந்தத் தண்டனையாக இருந்தாலும் அதை எனக்குக் கொடுங்கள்-உங்கள் மகன் என்பதற்காக அல்ல-நாடாள வேண்டிய இளவரசர் என்பதற்காகவாவது அவருக்கு ஒரேஒரு தரம் மன்னிப்பளியுங்கள்.
கமனு : பெண்ணே - தவறு செய்தவர் இருவராயிருக்கும்போது-உனக்குத் தண்டனையும்-அவனுக்கு விடுதலையும் தர எப்படி இயலும் என்றால் - உங்கள் இருவரையுமே விடுதலை செய்கிறேன். சாலி-நீ மன்னனாக வேண்டுமென்றால் மாலாவை மறக்கவேண்டும் - மாலா உனக்கு வேண்டுமென்றால் நீ மணிமுடியைத் துறக்க வேண்டும்-மாலாவா மணிமுடியா-உனக்கு எது வேண்டும்.

சாலி : மாலா...
மாலா : இளவரசே.
கமனு : [கண்ணீர் மல்க) மகளே -நாட்டுக்காக நீ உனது காதலையே தியாகம் செய்யத் துணிந்தாய். ஆனால் உனக்காக அவன் நாட்டையே தியாகம் செய்யத் துணிந்துவிட்டான். உங்கள் காதல் வாழ்வதற்காக நானும் என் மகனைத் தியாகம் செய்யத் துணிந்துவிட்டேன்.
மாலா : அரசே,
கமனு : உன் மனம்போல வாழ உன்னை ஆசிர்வாதிக்கிறேன். நீங்கள் நீடூழி காலம் வாழுங்கள். நான் வருகிறேன்.

ஆசுகவி நச்சரித்தான்

இராம. கண்ணப்பன்.

ஆசுகவி நச்சரித்தானை உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே! என்ன விழிக்கிறீர்கள்...? தெரியாதா...? அப்படியானால் நீங்கள் இவ்வுலகில் பிறந்த பிறவிப் பயனையே இழந்து விட்டீர்கள்; ஆமாம்! சரி! அவரது பட்டங்களையும் விருதுகளையுமாவது சொல்லுகிறேன்; அப்போதாவது தெரிகிறதா என்று பாருங்கள்!

ஆசுகவி, சித்ரகவி, மதுரகவி, நிமிஷகவி, கவிக்குஞ்சரம், கவிச்சிங்கம் புலவரேறு இவ்வளவு பட்டங்களையும் பெற்றவர், இவ்வளவையும் சிரமமில்லாமல் தன் பெயருக்கு முன்னால் சுமந்து கொண்டிருக்கும் புலவர் நச்சரித்தானை இன்னுமா உங்களுக்குத் தெரியவில்லை!

அட வியப்பே!

எமகிரி வட்டத்தில், அந்த நாளிலிருந்து இந்த நாள்வரை புலவர் பெருமக்களைப் பிறப்பித்துக் கொண்டு வரும் இடுகாடு என்னும் சிற்றூரில் தான் புலவர் நச்சரித்தான் அவதரித்தார். இவர் தாயின் வயிற்றிலிருந்து பிறப்பதற்கு ஒருமாதத்திற்கு முன்னாலேயே தந்தை இறந்து விட்டார். இந்தப் புண்ணிய பூமியில் இவர் பிறந்து ஒரு மாதத்திற்குப் பின்னால் பெற்றெடுத்த பெருமையிலே பெரும் பயணம் சென்று விட்டாள் தாய். பிறக்கும் முன்னே தந்தையையும் பிறந்த பின்னர் தாயையும் இழந்து விட்ட நச்சரித்தானுக்கு, பெற்றவர்கள் வைத்துவிட்டுப் போன சொத்துக்கள் ஒன்றும் அதிக மில்லை தான். நச்சரித்தான் கருவில் வளருவதற்கு முன்னால் இருந்த காணி நிலத்தை வட்டிக்கடை மட்டியப்பரிடம் ஒத்தி வைத்தார்கள் பெற்றோர்கள். ஒத்திவைத்த காணிநிலத்தை, பதினான்கு மாதத்தில் வட்டி, முக்காலேய அரைக்கால் பகுதியை செல்போல் அரித்து மட்டியப்பரிடம் சேர்த்து விட்டது. எஞ்சியிருந்த அரைக்கால் பகுதி நிலத்தையும் குடியிருந்த கூரை வீட்டையும் தான் நச்சரித்தானுக்கு வைத்துவிட்டுப் போனார்கள். இந்தச் சொத்துக்களோடு தாய் வழி மாமா ஒருவர் அவரை எடுத்து வளர்த்து வந்ததற்கும் காரணமில்லாமலில்லை. அதாவது: நச்சரித்தானுக்கு "ஜாதகம்" எழுதிய சோதிடர், பையன் தாயின் வயிற்றிலிருந்து ஒரு இரண்டேகால் விநாடி தாமதித்துப் பிறந்திருந்தானானால் இந்த உலகத்தையே கட்டியாளும் மன்னனாக இருப்பான்...! இம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்! எல்லாம் கடவுள் செயல்! அதனால் இப்போதும் ஒன்றும் பாதகமில்லை. மன்னராக முடியாவிட்டாலும் மந்திரியாக வருவதற்குரிய தகுதி இருக்கிறது" என்று சொன்னார் நச்சரித்தான் பிறந்த காலத்தில் ஜமீன் சமஸ்தானங்கள் நிறைய இருந்ததால் ஒரு வேளை தன் மருமகன் மந்திரியாக வரச் சந்தர்ப்பம் உண்டு என்றெண்ணி அவர் மாமனும் வளர்த்து வந்தார். ஆனால் அவரைப் பிடித்த நேரமோ அல்லது நச்சரித்தான் அவதரித்த நேரமோ ஒரு நாள் சுரைக்காய்க் கூட்டைச் சாப்பிட்டவர் சீத பேதியாகி மண்டையைப் போட்டுவிட்டார்.

நச்சரித்தான் படிப்பில் மிகவும் சூடிக்கையாக இருந்தார். அரிச்சுவடி மட்டும் இரண்டு ஆண்டுகள் இருந்த இடத்திலிருந்தே படித்தார். இவரோடு அரிச்சுவடி படித்தவர்களெல்லாம் அடுத்த ஆண்டு 'முந்திரி இலக்கம்' படிக்கத் தொடங்கியபோது அவர்களைப் பார்த்து இவர் "அரிச்சுவடியைக் குறைந்தது மூன்றாண்டாவது படித்து கரைத்துக் குடித்தால் தான் நல்லது. நீங்கள் படிப்பதெல்லாம் என்ன படிப்பா...?" என்று அவர்களைக் கேலி பண்ணுவார். இப்படியே முந்திரி இலக்கம், கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், ஆத்திசூடி-கொன்றைவேந்தன்; விவேகசிந்தாமணி வரையிலும் பத்தாண்டு காலம் படித்து முடித்தார்.

ஒரு நாள், ஆசிரியர் "சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராவர் பொறுப்பது கடனே" என்ற பாடலுக்குப் பதவுரை கூறிக்கொண்டிருந்தார். உடனே நமது நச்சரித்தானுக்குக் கவிதை ஞானம் ஏற்பட்டு "பெரியோர் சிந்திய பொரி கடலை எல்லாம் சிறியோரெல்லாம் பொறுக்குவது கடனே" என்றார். இதைக் கேட்ட ஆசிரியர் என்ன சொல்லுவதென்றே புரியாமல் மிகவும் நிதானமாக நச்சரித்தானை அருகில் அழைத்து, முதுகை ஆதரவாக வருடிக் கொடுத்து தம்பீ, நீ வருங் காலத்தில் ஒரு ஆசு கவியாக வருவாய், அதனால் உனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க நாங்கள் தகுதியற்றவர்கள். நீ படித்ததுபோதும் வீட்டுக்குப் போ!" என்று அனுப்பிவிட்டார். அது முதல் நச்சரித்தானும் வீட்டிலுள்ள ஆடு மாடு எருமை முதலிய கால் நடைகளைப் பாதுகாத்துக் கொண்டு, பள்ளிக்கூடத்தில் படித்த போது ஆசிரியர் சொல்லிக் கொடுத்த கவிதைகளை எல்லாம் நினைவு கூர்ந்து, அவற்றிற்கு எதிர் மறையாகக் கவிதைகள் இயற்றிக்கொண்டே, ஆடு மாடுகளோடு வளர்ந்து வந்தார்.

இப்படி ஆடு மாடு முதலிய கால்நடைகளோடு வளர்ந்து, போதுமான அளவு தமிழிலக்கணம் கற்றுக்கொள்ள அவருக்கு இருபது ஆண்டுகளாயிற்று. நச்சரித்தானுக்கு முப்பத்தைந்து வயதாகும்போதுதான், தனக்கும் கற்பனை இருக்கிறது; கவிதை எழுதமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இப்படி நம்பிக்கை ஏற்பட்ட பிறகு அவருக்கு, வள்ளுவரும், சாத்தனும் இளங்கோவும் கம்பரும் சர்வ சாதாரணமாகப்பட்டார்கள். 'இவர்களெல்லாம் என்ன முறையாகக் கற்று கவிதை எழுதியவர்களா...? இவர்களைப் புலவர்கள் என்று சொல்லுவதே தமிழுக்கு அவமானம்! ஏதோ சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பெரிய புலவர்களாகக் கருதப்பட்டார்கள்; என் போன்றவர்கள் அந்தக் காலத்தில் இருந்திருந்தால் இவர்களெல்லாம் இருந்த இடமே தெரிந்திருக்காது!" என்று நண்பர்களிடம் பேசும்போது அடிக்கடிக் குறை கூறி மகிழ்வார். அவர் எழுதும் கவிதைகளைத் தவிர மற்றவர்களின் கவிதைகளில், குறையைத் தவிர, நிறைவை அவர் இதுவரை கண்டு பிடித்ததே கிடையாது.

நச்சரித்தானுக்குக் கற்பனை வந்து பேனாவைக் கையிலெடுத்துவிட்டாரானால் எதுகையும் மோனையும் படாத பாடுபடும்; வாயிருந்தால் அழும். ஒரு வரி எழுதுவதற்கு ஒரு நாழிகையானாலும் ஆகும், அதற்கு மேலானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்படியவர் மளமள என்று இதுவரை எழுதி முடித்த கவிதைகள் எழுநூற்றி முப்பத்தி நான்கு; காவியம் இரண்டு.

கற்கண்டுச் சுவையுள்ள கருத்து நிறைந்த கவிதைகளெல்லாம் குறைந்தது இரண்டு தடவைகளாவது பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டு திரும்பி வந்ததன் மூலமாக தபால் நிலையங்களுக்கு ஆதாயத்தைத் தேடித் தந்திருக்கின்றன. அந்தச் சிற்றூரில் தபால் நிலையம் ஏற்பட்டதே இவருக்காகத்தான். வரும் கடிதமும் போகும் கடிதமும் இவருடைய கவிதைகளாகவேதான் இருக்கும். இந்தக் கவிதைகளிலே, பாவம் சும்மா சொல்லக் கூடாது; ஏழு கவிதைகள் பிரசுரமாயின. அட அடா! அந்தக் கவிதைகளுக்குத் தான் என்ன மதிப்பு! வாசகர்களிடமிருந்து பாராட்டிவந்த கடிதங்களை எல்லாம் கண்ணாடி போட்டு இன்னும் அலங்கரித்து வைத்திருக்கிறார். இந்த ஏழு கவிதைகளின் மூலமே நச்சரித்தான் இலக்கிய உலகில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்று விட்டதாக நினைத்துக் கொண்டார்.

ஒருநாள்கவிதைகளைப் பாராட்டி வந்த கடிதங்களுக்கு கண்ணாடிச்சட்டம் போடப்போகும்போது, அந்தக் கடைக்குப் பக்கத்திலிருந்த ஒரு புத்தகம் வெளியிடும்ஆசாமி, ஒரு காவியம்கொடுங்கள் நான் புத்தகமாக வெளியிடுகிறேன் என்று ஆசுகவியிடம் கேட்டார். இந்த நல்ல சமயத்தை நழுவவிடுவாரா நச்சரித்தான்! உடனே எழுதிவைத்திருந்த "தைரியம் புருஷ லட்சணம்; அகப்பட்டுக் கொண்டால் அவலட்சணம்" என்ற காவியத்தைக் கொடுத்தார். பதிப்பகத்தார் அதை வாங்கிப் படித்துவிட்டு, 'இதற்கு இருபத்தைந்து ரூபாயை வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னார். இதைக் கேட்டவுடன் நச்சரித்தானுக்குக் கோபம் வந்துவிட்டது. கோபத்தால் மீசை இல்லாத மேலுதடு படபடவெனத் துடித்தது. வாய் நிறைய இருந்த வெற்றிலை எச்சிலை வெளியே சென்று துப்பிவிட்டுக் கண்கள் சிவக்க பதிப்பகத்தாரின் முன்னால் வந்து நின்றார்.

என்னய்யா. ஒரு காவியத்திற்கு இருபத்தைந்து ரூபாய்தானா? இந்தக் காவியத்தை நான் எழுதும்போது போட்டுத் துப்பிய வெற்றிலை பாக்குக்குக் கூடக் காணாதே நீங்கள் கொடுக்கும் பணம்?'

"புலவரய்யா. நீங்கள் எதிர்பார்க்கும் பணத்தை எங்களைப் போன்ற புத்தகம் வெளியிடுவோர்களால் தர இயலாது. சினிமாவிற்குப் பாடல் எழுதினால்தான் முடியும். அது மிகவும் சுலபமான வழி. பத்து அல்லது பனிரெண்டு வரிகள் எழுதினால் போதும், ஆயிரம் இரண்டாயிரம் என்று தருவார்கள் நல்ல புகழும் கிடைக்கும்!" என்றார் பதிப்பகத்தார்.

"உங்கள் யோசனைக்கு மிகவும் நன்றி. கொடுங்களய்யா காவியத்தை; நீங்களே ஒரு நாள் என் காவியத்திற்காக என்வீட்டு வாசலில் வந்து நிற்பீர்கள்; அப்போது பேசிக்கொள்கிறேன்!" என்று சொல்லி விட்டு, அவரிடத்திலிருந்து காவியத்தை வெடுக்கெனப் பறித்துக் கொண்டு வெளியே வந்தார் ஆசுகவி.

அன்று முதல் 'சினிமாவிற்குப் பாட்டெழுதினால் நிறையப் புகழ் வரும்; அதோடும் பணமும் சம்பாதிக்கலாம்' என்ற ஆசை ஏற்பட்டது அவருக்கு. அந்த ஆசையை நிறைவேற்றிக் கொண்டு நிறையப் பணமும் புகழும் சம்பாதிக்க, ஒருநாள் எழுதிவைத்திருந்த கவிதைகளையும் செலவுக்கு நாற்பது ரூபாயையும் எடுத்துக் கொண்டு, சென்னைக்கு ரயில் ஏறினார். அன்று இரவு முழுவதும் அவருக்குச் சினிமாவைப் பற்றிய நினைப்புத்தான். வண்டி சென்னையை நெருங்க நெருங்க சினிமா உலகம் தன்னைக் கைநீட்டி வரவேற்கக் காத்துக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தார்.

சென்னையை வந்தடைந்த நச்சரித்தானுக்கு உற்சாகம் உடைப்பெடுத்தோடும் ஏரி வெள்ளத்தைப்போல் கரை புரண்டு ஓடியது. முறைப்படி சிப்பாவைப் போட்டுக் கொண்டார். சூம்பிய பனங்காயைப் போன்றிருந்த தலை முடிக்கு கொண்டு வந்த அரைக் கீரைத் தைலத்தைப் போட்டுப் படியப் படிய வாரி விட்டுக்கொண்டு, ஏழரை முழ சரிகைத் துண்டையும் தோளில் போட்டுக் கொண்டார். பத்திரிகைகளுக்குப் படையெடுத்துத் திரும்பி வந்த கவிதைகளை எடுத்துக்கொண்டு சினிமாக் கம்பெனிகளுக்குப் புறப்பட்டு விட்டார்.

முதன் முதலில் புலவரின் சிறுத்த விழிகளுக்கு 'பல்டி பிலிம்ஸ்' தெரிந்தது. ஆவலோடு அதற்குள் நுழைந்தார். எதிரே நின்ற அலுவலகப் பையனிடம் முதலாளியைப் பார்க்க வேண்டுமென்றார். அவன் உடனே மேனேஜரிடம் அழைத்துச் சென்றான். மேனேஜரிடம் தன்னைத்தானே கூச்சமில்லாமல் அறிமுகம் செய்துகொண்டார்.

"நான்தான் ஆசுகவி நச்சரித்தான். எனது கவிதைகளைத் தாங்கள் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். நான் இப்போது சினிமாவிற்குப் பாடலெழுத வந்திருக்கிறேன். இதோ இதில் எட்டு அருமையான பாடல்களிருக்கின்றன" என்று கூறிக்கொண்டே பலமுறை பத்திரிகைகளுக்குப் படையெடுத்துத் திரும்பி வந்தகவிதைகளை எடுத்துக் கொடுத்தார். மேனேஜர் அதை வாங்கிப் படித்துப்பார்த்த பிறகு,"நன்றாகத்தானிருக்கிறது. ஆனால் ..." என்று இழுத்தார். அவர் தயங்குவதைப் புரிந்துகொண்ட ஆசுகவி சற்று நெருங்கி உட்கார்ந்து பேசத் தொடங்கினார்.

"பணத்தைப்பற்றிக் கவலைப்படாதீர்கள், ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபாய் கொடுத்தால் போதும். இப்போது எவன் எவனெல்லாமோ பாட்டு எழுத வந்துவிட்டான். அதெல்லாம் என்ன பாடலா? என் பாடலை ஒருமுறை போடுங்கள். அதன் பிறகு பாருங்கள். என் பெயருக்காகவே, எனது பாடல்களுக்காகவே, எவ்வளவு மட்டமான படமாக இருந்தாலும் ஓடும்!"

புலவரின் பேச்சைக் கேட்ட 'பல்டி பிலிம்ஸ்' மானேஜருக்கு அழுவதா சிரிப்பதாவென்று தெரியவில்லை. நமது படம் முடியும் தருவாயிலுள்ளது. அதனால் நீங்கள் முகவரி கொடுத்துவிட்டுப் போங்கள். அடுத்த படம் நாங்கள் எடுத்தால் உங்களுக்குத் தெரிவிக்கிறோம்" என்றார்.

"மறந்துவிடாதீர்கள் சார்! ஞாபகமிருக்கட்டும்" என்று சொல்லி முகவரியைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தார், நச்சரித்தான்.

கடைசியாக திருவோடு பிக்சர்ஸார் தயாரிக்கும் 'பிச்சைக்காரன்" என்ற படத்துக்குப்பாடலெழுதப் புலவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. மடமடவென்று இரண்டு பாடல்களை எழுதிக் கொடுத்தார். அதைப் பார்த்துவிட்டு அந்தப் படத்தின் முதலாளி "சினிமாவிற்குப் பாட்டு இப்படி எழுதக்கூடாது. மியூசிக் டைரக்டரோடுகூட இருந்து மியூசிக் போடும்போது அதற்காகப் பாடல் எழுத வேண்டும். நாளைக்கு

MALA NEWS MART

ஆசுகவி

ஏற்பாடு செய்கிறேன் வாருங்கள்'' என்று அனுப்பி வைத்தார்.

மறுநாள் மிகவும் உற்சாகத்தோடு, ' திருவோடு பிக்சர்ஸ்'' அலுவலகத்திற்குள் நுழைந்தார் ஆசுகவி.

சுற்றிலும் ஒருமுறை கம்பீரமாகக் கண்களைச் சுழலவிட்டு, அங்கு வைத்திருந்த விதவிதமான இசைக் கருவிகளைப் பார்த்தார். இதற்கு முன்னர் இதுபோன்ற இசைக் கருவிகளை அவர் கண்ணுலே பார்த்ததே இல்லை.

'சரி நேரமாகிறது. ஆரம்பிக்கலாமே'' என்ருர் உரிமையாளர். புலவர் உட்கார்ந்தார். இசையமைப்பாளர் ஒரு ராகத்தை வாசித்து ''பல்லவி போடுங்கள் சார்!'' என்ருர். 'பல்லவி என்ருல் என்ன ?' என்று புரியவில்லை புலவருக்கு. இசையமைப்பாளர் ஒரு பல்லவியைப் பாடி ''இதுதான் பல்லவி என்பது'' என்று விளக்கிக் கூறினுர். புலவருக்கு இது விசித்திரமாக இருந்தது. சரியாகப் புரியவில்லை. ஆனுலும் சமாளித்துக்கொண்டு. முன்னுல் பத்திரிகைகளுக்கெழுதிய கவிதை ஒன்றின் முதல் இரு ''அறிவானுந்தானே அறிவிப்பான், தானே அறிவாய் அறிகின்ருன்தானே'' என்ற அடிகளைப் பாடினுர். இசைக்கு ஒத்து வரவில்லை இந்தப் பல்லவி. மறுபடியும் இசையமைப்பாளர் விளக்கிக் கூறினுர். புலவர் மறுபடியும் எழுதினுர். அதுவும் சரியில்லை என்று கூறிவிட்டார் இசையமைப்பாளர். புலவருக்குக் கோபம் பொங்கியது. அதனுல் மூக்குச் சிவந்துவிட்டது.

இசையமைப்பாளர் மறுபடியும் முழு இசையை வாசித்துக் காட்டத் தொடங்கினுர். அவர் கையிலிருந்த பிடில் இசையைப் பொழிந்துகொண்டிருந்தது. இதைக்கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த புலவர் திடீரென்று சைகைகாட்டிநிறுத்தினுர். இசையமைப்பாளரைப் பார்த்து, 'நீங்கள்வாசிக்கும் போது ஏதோ சுருதி பேதப்பட்டு வருகிறதே! நீங்கள் இத்துறைக்குப் புதிதோ?'' என்ருர்.

இசையமைப்பாளர் இசைத் துறையில் நன்கு பிரசித்திபெற்றவர். கோபம் வந்துவிட்டது அவருக்கு.

''போமய்யா, நீ பாட்டெழுதிக் கிழித்தாய்...! முப்பது வருசமா இந்த பீல்டுலே இருக்கேன்; என்னை ஒரு பயல் இப்படிக் கேட்டதில்லை!'' என்று கத்தினுர். புலவருக்கும் கோபம் வந்துவிட்டது. இருவரும் எழுந்து நின்று காரசாரமாக உரையாடிக்கொண்டார்கள். உரிமையாளர் ஒன்றும் புரியாமல் விழித்தார் இசையமைப்பாளர் உரிமையாளர் பக்கம் திரும்பி, இவன் எழுதும் பாட்டுக்கு என்னுல் இசையமைக்க முடியாது என்று சொல்லிவிட்டு, வெளியே நின்ற தனது காரிலேறிக்கொண்டு போய்விட்டார். அதுவரை அமைதியாக இருந்த உரிமையாளருக்கும் கோபம் வந்துவிட்டது.

''புலவரய்யா, இந்தத் தொழிலுக்கும் உங்களுக்கும், பாம்புக்கும் கீரிக்கும் உள்ள உறவு; தயவு செய்து போய் வாருங்கள்!' என்ருர்.

''என்னய்யா இப்படிச் சொல்லிவிட்டீர்கள்!'' என்ருர் பரிதாபமாகப் புலவர்.

''கெட் அவுட்; போய்யா வெளியே! உன்னுல் எனக்கு இன்று இருநூறு ருபாய்க்குமேல் செலவு'' என்று கத்தினுர்.

கர்ண கடூரமான அந்தக் கத்தலே புலவரை வாசல்வரை தள்ளிக்கொண்டு வந்தது. சோர்ந்த முகத்தோடு ஒரு முறை அந்த அலுவலகத்தைப் பார்த்துவிட்டு நடக்கத் தொடங்கினுர், ஆசுகவி அன்றிரவே சினிமாவிற்குப் பாடல் எழுதும் ஆசையை மறந்துவிட்டுத் தன் சொந்த ஊரான இடுகாட்டிற்கு இரயிலேறிவிட்டார்.

மறுநாள் புலவர் ஊர் வந்து இறங்கியவுடன், பலாப்பழத்தில் மொய்க்கும் ஈக்கூட்டத்தைப்போல், நண்பர்கள் அவரை மொய்த்துக்கொண்டு, போன காரியத்தைப்பற்றித் துருவித் துருவி வினவினுர்கள். நண்புர்களிடத்திலெல்லாம் அவர் 'எனக்குப் பிடிக்காததால் வந்துவிட்டேன்'' என்று மட்டுமே கூறினுர். அவர்களுக்குப் புலவரைப் பற்றித் தெரியாதா என்ன ?

அந்தோ பரிதாபம்-அடுத்தவர்கள் செய்யும் எந்தக் காரியமானுலும் அதைக் குறை கூறுவதிலேயே தன் வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கழித்துவிட்ட, ஆசுகவி நச்சரித்தான்-இனி ஏன் பேனுவைத் தொடப் போகிருர் ? ★

இவர்களின் பொங்கல்.

மற்றப் பண்டிகைகளை எல்லாம் விட, பொங்கல் திருநாளை தமிழ் மக்கள் அதிக மகிழ்ச்சியோடு கொண்டாடுகிருர்கள். விவசாயத்தையே நம்பி வாழும் மக்களுக்குப் பொங்கல் ஒரு பொன்னுன நாள். கிராமங்களிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் சிரிப்பும் களிப்பும், வேடிக்கையும் விளையாட்டும் அன்று தாண்டவமாடுகிறது.

......இனிப்பான கரும்பையும், சர்க்கரைப் பொங்கலையும் படைத்து இயற்கைக்கு நன்றி தெரிவித்துவிட்டு, இன்பத்தோடு சுவைக்கிருர்கள். புத்தாடை உடுத்துப் புது வாழ்வைத் துவங்குகிருர்கள்.

ஆனுல் பொங்கல் திருநாளன்று நமக்குப் புத்தாடையை அளித்து வரும் கைத்தறி நெசவாளர்கள் முகங்களிலே இன்று மகிழ்ச்சிக் குறி காணப்படவில்லை. கவலைக குறிதான் காணப்படுகிறது.

'பிளீடிங் மதராஸ்' என்ற ஒரு வகைத் துணியை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதற்கென்றே ஏராளமாகத் தயாரித்திருக்கிருர்கள்...... ஆனுல் அமெரிக்க வியாபாரிகள் நம்மை அடியோடு கைவிட்டுவிட்டார்கள். காரணம் எதுவாயிருந்தாலும் இன்று தமிழ்நாட்டில் சுமார் பதினுறு லட்சம் கஜம் 'பிளீடிங் மதராஸ்' தேங்கிக் கிடக்கிறது. ஏழை நெசவாளர்களின் சொற்ப மூலதனம் முடங்கிக் கிடக்கிறது. லாபமும் கிட்டவில்லை. குதூகலமாகக் கொண்டாட வேண்டியவர்கள் வயிற்றில் ஈரத் துணியைக் கட்டிக் கொண்டு தவிக்கிருர்கள்.

...ஆகவே கைத்தறி நெசவளார்கள் பிழைப்புக்கு ஏதாவது நிரந்தர வழி செயதாக வேண்டும். எவ்வளவுதான் தள்ளுபடி அளித்தாலும் உள்நாட்டில் மில் துணியுடன் அவை போட்டி போடவும முடியாது.

கரை போட்ட வேட்டி, புடவை போன்ற குறிப்பிட்ட சில ரகத் துணிகளை மில் போட்டியிலிருந்து விலக்கி கைத்தறிக்கே ஒதுக்கினுல் தான் கைத்தறி நெசவுத தொழில் பிழைககமுடியும். ஆனுல், அதைச் செய்ய மத்திய சர்க்கா ஏனோ மறுக்கிறது.

கைத்தறி நெசவு தமிழகத்தில் விவசாயத்துக்கு அடுததபடியான பெரும் தொழில். பல லட்சம் பேர்கள் அதை நம்பி உயிர் வாழ்கிருர்கள் ஆகவே சென்னை அரசாங்கம் இடைவிடாமல் வற்புறுத்தி மத்திய அரசாங்கத்தை இந்த வழிக்கு இணங்க வைக்க வேண்டும்.

இதற்கிடையில் தமிழர்களாகிய நாம் ஏழை நெசவாளர்களுக்கு நம்மாலியன்ற உதவியைச் செய்யலாம். வேட்டி சேலை இவ்விரண்டு வகைகளையும் கைத்தறியைத் தவிர மில் துணியை வாங்குவதில்லை என்று ஒவ்வொரு தமிழனும் உறுதி செய்துகொள்ள வேண்டும். இந்தப் பொங்கல் திருவிழாவிலிருந்தே அந்த உறுதியைச் செயலில் காட்டவும் வேண்டும். அப்போதுதான் நெசவாளர் துயரம் துடைக்கப்படும்.

— ஆனந்த விகடன்.

பொங்கல் புதுநாள் என்ருலே விவசாயிகளின் திருநாள். இத்திருநாளின்போது விவசாயிகளின் நிலையைப்பற்றிச் சற்றுப் பார்ப்போம்.

......பாடுபடுபவனுக்குப் பயனை அனுபவிப்பவனுக்கும் இடையே, நிலச் சொநதக்காரனை அப்புறப் படுத்திவிட்டு, காங்கிரஸ் சர்க்கார் ஓர் உரிமையுமில்லாத குத்தகைக்காரனை சர்வ வல்லமை பொருந்தியவனுக்கிவிட்டது. இவர்களின் அலட்சியப் போககின் காரணமாக உண்மையாகப் பாடுபடும் விவசாயக் கூலிகளின் நிலைமை படுமோசமாகிவிடடது. அவர்களது உண்மையான நிலை என்னவென்பதைச் சர்க்கார் நியமித்த கமிட்டியின் அறிக்கை வெகு தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

விவசாயிகளின் பெருந் தொகையினரான விவசாயக் கூலிகளின் வருமானம் பெருமளவுக்குக் குறைந்திருக்கிறது. இவர்களிடையே வேலையில்லாக் கொடுமை அதிகரித்திருக்கிறது. 1951-ல், ஆண்டுக்கு 90 நாடகள் வேலையில்லாமல் இருந்தார்களென்ருல் 1957-ம் ஆணடு 128 நாட்கள் வேலையில்லாமல்இருந்திருக்கிருர்கள். முன்பு 108 ந-பைசாவாக இருந்த கூலி இப்போது 96 ந-பைசாவாகக் குறைந்துவிட்டது. இந்த மககளின் கடன்சுமை 1950ல் 80 கோடி ருபாயாக இருந்தது. 1956 ல் 143 கோடியாக உயர்ந்துவிட்டது. முன்பு நூற்றுக்கு 45 குடும்பங்கள் கடன் தொல்லையினுல் அவதிப்பட்டன என்ருல் 1957-ல் 64 குடும்பங்கள் அவதிப்படுகின்றன ஒவ்வொரு வருஷமும் இந்த ஏழை மக்கள், தங்கள் ஒவ்வொரு வருடைய குடும்ப சம்ரக்ஷணைககாகவும் ரூ 180 வரை கடன்படுகிருர்கள் என்று புள்ளிக் கணக்கு கூறுகிறது. அதாவது நிலத்தில் வேலை செய்து பிழைக்கும் ஏழை ஹரிஜன மக்கள் படும் கஷ்டம் சொல்லிமுடியாது என்பதுதான் அதன் பொருள்.

இந்தப் படுமோசமான நிலைக்குக் காரணம் யார்? காங்கிரசின் கொள்கைகளும் ஆட்சி முறையுமே இதற்குக் காரணம் என்று சொல்லித்தான் ஆக வேண்டியதிருக்கிறது.

''நாம் ஏழைகளுக்கு உதவிக்கொண்டிருக்கிருேம் என்பது பொய் என்பதை இந்த அறிக்கை பகிரங்கப் படுத்திவிட்டதே'' என்று இந்த அறிக்கையைப் பார்த்துவிட்டு இன்றையக் காங்கிரஸ் சர்க்கார் கையைப் பிசைந்துகொண்டிருக்கிருர்கள்.

இதற்குப் பரிகாரம் காண, காங்கிரஸ் சர்க்கார், இந்த ஏழை உழவர்களுக்குக் கட்டாயமாக இவ்வளவு கூலி தர வேண்டும் என்று சட்டம் செய்வோம் என்று சொல்ல ஆரம்பிப்பார்கள். கூலியை அதிகமாக்கிவிட்டு, அதனுல் உணவுப் பொருள்களின் விலையை உயரச் செய்துவிட்டால். இந்தக் கூலி உயர்வால் அவர்களுக்கும்தான் என்ன லாபம் ?

காங்கிரஸ் ஆட்சியில், கஷ்டங்களும், துயரங்களும் இன்னும் அதிகமாக ஏற்படத்தான் வழியிருக்கிறது என்பதைப் பவ நகரில் கூடிய காங்கிரஸ் தெளிவாக்கிவிட்டது. ஆகவே, காங்கிரசின் இந்தப் பசப்பு வார்த்தைகளுக்கு மயங்கமுடியாது என்று இந்தப் பொங்கல் திருநாளில் தமிழ் நாட்டு மக்கள் உறுதி பூண வேண்டும்.

—கல்கி.

திலகம்

பாரததேச ஜன சமுத்திரமே! பானையிலிட்ட பால் பொங்கல்போல், நீ பொங்கி வழிந்து தீயவை அழிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. தை பிறந்துவிட்டது,

சுதந்திரம் பெற்ற மக்கள் வாழ்வில், ஆட்சியாளர்களின் ஊழல்கள் தீப்பற்றி எரிகிறது; அவர்களுக்குப் பதவி கருப்புப்பால் இனிதுவிட்டது. அதைச் சுவைத்துக்கொண்டிருக்கத் திட்டமிட்டுவிட்டனர். மக்கள் இதயத்தை மண் பாண்டமாக்கி சர்க்கரைப் பொங்கல் பொங்கிட இன்றையக் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் முன்னணியிலிருக்கின்றனர். இது மக்களுக்குச் சோதனையான நேரம் - வேதனையான காலமும் ஆகும். பொதுஜன உணர்ச்சி அமைதி கொண்டிருந்தால் இனி நாடு சுபிட்சமடையாது - அது பொங்க வேண்டும்-பொங்கி எழ வேண்டும். பொங்கி எழுந்து தீயவைகளைப் பொசுக்க வேண்டும்.

மார்கழி மறைந்து தைப் பிறந்த இந்த நன்னுள் பாரத தேசத்தின் தெற்கு வாழ் பகுதி மக்களுக்கு மிக முக்கியம் வாய்ந்த திருநாள-உழைப்பின் பலனைச் சுவைத்து உண்டு அனுபவித்துக் களிப்புக்கொளளும் பெருநாள். இன்னுளில சுதந்திரம் பெற்ற மக்கள், தாங்கள் பெற்ற சுதந்திரத்தின் பெருமையைச் சுவைக்க முடியவில்லை-சுதந்திரத்தின் தன்மையை - மென்மையை அனுபவிக்க முடியவில்லை. எனவே மககள் அரும்பாடுபட்டு உழைத்துப் பெற்ற சுதந்திரத்தைப் பரிபூரணமாக அனுபவித்துணர்வதற்காக வேண்டி பொங்கித்தான் ஆக வேண்டும்; அனைவர் உள்ளமும் பொங்கி ஒரு புது மார்க்கத்தை ஏற்படுத்துமாக!

—திலகம்,

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஆண்மகனைப் புலிபோலப்பாய்ந்தான் எனவும், பெண்ணை மான்போல மருண்டாள் எனவும், யானைபோல் வானை, யானை எனவும்; அன்னம்போல் வானை, அன்னமெனவும் உவமை கூறி, அஃறிணையோடு உயர் திணையைப் பொருத்தி; முன்னதை தொழில் உவமையெனவும்; பின்னதை ஆகு பெயர் எனவும் இலக்கணம் வகுத்துக் கூறுவோமே! இதற்கு அந்தச் சிலர் என்ன சொல்வார்கள்? அஃறிணையின் தொழிலையும், தன்மையையும் உயர் திணைக்குப் பொருத்திக் கூறும்போது; அஃறிணையின் தன்மையான படிக்காத செயலையும் ஏன் உவமையாக்கிக் கூறக் கூடாது? உறுதியாகக் கூறலாம்.

இப்படிக் கூறுவதற்கு "அகப் பொருள்" என்ற இலக்கண நூலிலும் விதி உண்டு. அவ்விலக்கண நூலில் "களவியல்" என்னும் இயலில் உள்ள களவிற்குரிய கிளவிகளில் ஒன்ருன "இயற்கைப் புணர்ச்சி" என்று கூறப் படும்; அதன் விரியுள் ஒன்ருன "பொய் பாராட்டல்" என்ற துறை இல்லதும் உள்ளதும் புனைந்து பாடப்படுவ தாகும். இதை கோவையென்னும் நூலிலும், அகப் பொருளைப்பற்றிப் பேசுகின்ற பிற இலக்கியங்களிலும் காணலாம். சான்ருகத் தஞ்சை வாணன் கோவையில் ஒரு பாட்டைக் காண்போம்.

"பருந்தொன்று கூரிலை வேற்
 படை வாணன் பரிமளப்பூஞ்
செருந்தொன்று சோலைத்தென்
 மாறைஅன்னீர் செழுந்
 திங்களுங்கள்
முருந்தொன்று கோப முகங்
 கண்டு நாணி முயல்மறுத்திர்
மருந்தொன்று நாடியன்றே
 வட மேரு வலங்கொள்வதே"

—என்ற பாடலில், திங்கள் மருந்தொன்று நாடி இமயத்தை வலங் கொள்வதாகக் கூறுகிருர் இந்நூலாசிரியர் பொய்யாமொழியார். இதற்கு உரையெழுதும் சொக்கப்ப நாவலர், இதில் இல்லது மருந்துதொன்று நாடுதல், உள்ளது வடமேரு வலங் கொள்வது என்று எழுதுவர். இது போல, கவிஞர் எழுதிய பாட்டு இல்லது புனைதலென்க. எனவே கவிஞருடைய பாட்டிற்கும் அகப்பொருள் இலக்கிய மான தஞ்சைவாணன் கோவைப்பாட்டி னுக்கும் ஒரு சிறு வேறுபாடே இருக்கின்றது. கவிஞருடைய பாட்டில் தலைவி (மனைவி) தலைவனை (ரங்கனை) இல்லது புனைந்து பாடி தன் கணவன் மனக்குறை தீர்க்கிருள். தஞ்சை வாணன் கோவைப்பாட்டில் தலைவன் தலைவியை இல்லது புனைந்து பாடி தலைவியினுடைய அன்பைப் (காதலை) பெறுகிருன். இதுவே வேறுபாடாம் என அறிக.

இனி, இவ்வாறு அஃறிணையோடு உயர்திணையையும் உயர்திணையோடு அஃறிணையையும் உவமை காட்டிக் கூறுதற்கும், எழுதுதற்கும் தொல்காப்பியம் விதி வகுத்துக் கூறுகின்றது. இலக்கண வரையறை செய்திருக்கிருர் தொல்காப்பியர்.

"வாரா மரபின வரக்
 கூறுதலும்
அன்னவை யெல்லா
 மவற்றவற் றியலான்
இன்ன வென்னும்
 குறிப்புரை யாகும்"

—என்பது தொல்காப்பியம் கூறும் விதி. இந்நூற்பாவிற்கு உரையெழுதும் "இளம்பூரணர்" விலங்கும், மரனும். புள்ளும் உள்ள நோய் உற்ருர்க்கு, மனக்குறைக்கு மறுதலை மாற்றம் கூறுவன போலும் குறிப்பின வாகப் புலப்படுதலால் இது சொல்லப் பட்டது "என இந்நூற்பாவிற்கு விளக்கம் எழுதுவர். மனக்குறை உள்ளவர்கள் இவ்வாறு அஃறிணையைச் சுட்டிக் காட்டிப்பாடுவார்கள் என்ற கருத்தை இளம்பூரணர் நன்கு உணர்த்துகின்ருர். இளம்பூரணர் உள்ள நோயென்றும், மனக்குறை என்றுமே கூறுகிருரே யொழிய இன்ன குறை உள்ளவர்கள் தான் இவ்வாறு பாடுவர் என்று கூறவில்லை. எனவே, தலைவன் தன்னைவிட்டுப் பிரிந்த குறை இருந்தால் தான் புள்ளையும், விலங்கையும் இன்னபிறவற்றையும் பார்த்துப் பாடவேண்டும் என்று பொருள் கொள்வதை விடுத்து, பொதுவாக மனக்குறை உள்ளவர்கள் எல்லோரும் பாடலாம் என்று நாம் பொருள் கொண்டு ஆராயவேண்டும்.

இனி, இலக்கியத்தில் அஃறிணையோடு உயர்திணையை உவமையாக்கியும், உயர்திணையோடு அஃறிணையை உவமையாக்கியும் பாடித் தன் உள்ள நோயை (மனக்குறை)த் தீர்த்துக் கொள்வதாகப் பாடப்பெற்றிருக்கும் செய்யுட்களைக் காண்போம். இவ்வாறு எவ்வெவற்றை உவமையாக்கியும், முன்னிலைப்படுத்தியும் கூறலாம் என்பதை—

ஞாயிறு, திங்கள்,
 அறிவே, நாணே,
கடலே, கானல்,
 விலங்கே, மரனே,
புலம்புறு பொழுதே,
 புள்ளே, நெஞ்சே
அவையல பிறவு
 நுதலிய நெறியால்
சொல்லுந போலவுங்
 கேட்குந போலவுங்
சொல்லியாங் கமையும்
 என்மனர் புலவர்

—என்று தொல்காப்பியம் விரித்துக் கூறும். இக்கருத்தையே நன்னூலிலும்.

கேட்குந போலவும்
 கிளக்குந போலவும்
இயங்குந போலவும்
 இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும்
 அறையப் படுமே

—என்று சுருக்கிக் கூறுகிறது. இனிப் பாடல்களைக் காண்போம்.

"மாய்தலும் பிறத்தலும்
 வளர்ந்து விங்கலுந்
தேய்தலு முடைமையைத்
 திங்கள் செப்புமால்"

—என்று திங்கள் சொல்வதாகக் கூறுகிருர். பேசுதல் தொழில் உயர் திணைக்கு உரிய ஒன்று அல்லவா? அதை எப்படி அஃறிணை மேல் ஏற்றிக் கூறலாம். திங்கள் படித்தா இருக்கிறது. அது ஓர் அஃறிணை தானே? அது எப்படிச் சொல்லமுடியும்? ஏன் உணர்த்துமால் என்று பாடியிருக்கலாமே? இவ்வாறு அஃறிணையை உயர்திணையாக்கிக் கூறியதால் சிந்தாமணி ஆசிரியர் ஓர் அர்த்தமற்ற கவிஞரா?

"தம்முடைய தண்ணளியும்
 தாம்தம் மான்றேரும்
எம்மை நினையாது
 விட்டாரே விட்டகல்க
அம்மென் இணர
 அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை
 நாம்மறக்க மாட்டேமால்"

—என்று சிலம்பில் மாதவி கானல் வரி பாடுங்காலை கொடிகளையும், அன்னங்களையும் சேர்த்து "நம்மை" என்றும், மறக்க மாட்டோம் என்று கூறுகின்ருளே? மறத்தல் தொழிலும், நினைத்தல் தொழிலும் கொடிகளுக்கும், அன்னங்களுக்கும் உண்டா? இல்லையே! அப்படி என்ருல் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோ வடிகள் ஓர் அர்த்தமற்ற கவிஞரா?

இவற்றையெல்லாம் படிக்காத அவர்கள் கவிஞரைத் தாக்குகின்றனர். "உருவக உவமையில் திணைசினை முதல்கள் பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே" என்று நன்னூலார் உயர்திணையும் அஃறிணையும் தம்முள் உருவகமாகவும் உவமையாகவும் வருதற்கு விதிகூறுகிருர். வாழைமரமும், சோலையும், குயிலும் அஃறிணைதானே? அது எப்படிப் படிக்கமுடியும் என்று கேட்பவர்கள்,

இலமென் றசைஇ
 யிருப்பாரைக் காணி
னிலமென்னு
 நல்லாள் நகும்,

—என்னும் பாட்டைப் பார்க்க வேண்டும். இப்பாட்டில் நிலம் சிரிக்கும் எனக் கூறுகிருரே செந்நாப்போதார். உயர்திணையல்லாத நிலம் சிரிக்குமா? இப்படி எழுதிய வள்ளுவனுர் அர்த்தமற்ற செய்யுள் இயற்றுபவரா? இது போன்ற பாடல்கள் சங்க இலக்கியங்கள் முழுதும் பரவிக் கிடக்கின்றனவே.

இனி, அந்த ஒரு சிலர் இவையெல்லாம் (உதாரணம் காட்டியது) முன்னிலையாக்கித் தானே (சுட்டி) எழுதப் பெற்றிருக்கின்றன. இப்பாடல் முன்னிலையாக்கியா பாடப்படுகிறது? என்று கேட்கலாம். அவர்கள் "படிக்காத மேதையைப் பார்த்தால் தலைவி (லட்சுமி) வாழை மரத்தின்முன் நின்றும் முகிலைப் பார்த்ததும் "படித்ததா?" என்று சுட்டிக் காட்டிப்பாடுகின்ருள். இப்பாடலுக்குக் கணவன் முன்னிலை யாகவும,அவைகள் படர்க்கையெனவும் கொள்க.

கவிஞர் இலக்கண வரம்பை மீறிச் செல்லவே இல்லை. முதலில் மரத்தையும், அடுத்ததாக முகிலையும் மூன்ருவதாக புள்ளையும், நான்காவதாக விலங்கையும் உவமையாக்கிக் கூறுகிருர். எனவே, முன்னர்க் காட்டிய "ஞாயிறு" எனத் தொடங்கும்; தொல்காப்பிய நூற்பாவிற்கு இப்பாட்டு எவ்விதத்திலும் மாறுபடவில்லை என்பதை வலியுறுத்திக் கூறலாம். அது "அன்ன பிறவும்" என்றதற்குள் அமையும் என்க.

அந்த ஒரு சிலர் கவிஞரைத் தாக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான், அவர்கள் எப்பொழுதும் கவிஞருடைய படைப்புக்களில் தவறு கண்டுபிடிக்க வேண்டும் என நினைத்து, சிறுபிள்ளைத்தனமாக அடிக்கடி தவறு செய்கின்றனர். முன்பு கவிஞர் பழம் பாடல் வரிகளை எடுத்தாள்கிருர். அது தவறு என்றனர். பழம் பாடல் வரிகளை எடுத்தாள்வது தவறில்லை என்று விளக்கம் சேர்ந்த மறுப்பு எழுதியவுடன் அடங்கி விட்டனர். இப்பொழுது மீண்டும் பாடல்களில் குற்றம் கண்டுபிடிக்க ஆரம்பித்து விட்டனர்; அந்த நக்கீரனின் வாரிசுகள். அவன் குற்றத்தைக் குற்றமென்ருன், இவர்கள் பாட்டின் பொருளே புரியாமல் தடுமாறிக் குற்றமெனக் கதைக்கின்றனர்.

அந்தச் சிலர். செய்யுளுக்குத்தானே தொல்காப்பியம் கூறிய இவ்விலக்கணம் பொருந்தும்; திரைப் பாடலுக்குப் பொருந்துமா? என்று கேட்கலாம். செய்யப்படுவது செய்யுள். பாடப்படுவது பாட்டு எனப்படும். பாட்டு, செய்யுள், தூக்கு, தொடை முதலிய பெயர்கள் கவிதைக்கும் உண்டு. செய்யுள் செய்து, இசையோடு பாடும் பொழுது, அதே செய்யுள் பாட்டாக உருவெடுக்கிறது. எப்படிக் காய்முற்றிக் கனிந்தவுடன் பழமெனப் படுகிறதோ, அது போலவே செய்யுள் இசையாக மாறியவுடன் பாட்டென அழைக்கப்பெறுகின்றது. காயும் வேறல்ல, கனியும் வேறல்ல, அதைப் போலவே செய்யுளும் பாட்டும் ஆகும். எல்லாம் ஓரினமே, இன்று, திருக்குறளை எத்தனை பேர் பாட்டாகப் பாடுகின்றனர். இன்னும், சில ஆண்டுகளில் திருக்குறள் முழுதும் பாட்டாக மாறிவிடும். எனவே செய்யுளுக்கும், திரைப் பாடல்களுக்கும் சிறு இலக்கண வேறுபாடு மட்டுமே உண்டு எனக் கொள்க. கவிஞருடைய பாடல் இசைப் பாட்டென்க. இப்பாடலை இசையமைத்துப் பாடவில்லையெனின், நிச்சயமாகக் கவிஞருடைய பாடல் செய்யுளாகவே (கவிதை) இருந்திருக்கும் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

இன்னெரு ஐயமும் அவர்களுக்கு எழலாம். இலக்கியங்களில் தலைவி தன்னுடைய துயரையே, அஃறிணையிடம் கூறித் தீர்த்துக் கொள்கிருள். அவைகளின் செயலோடு, தன் செயலையும், தலைவன் செயலையும் பொருத்திக் காண்கிருளா? என்ற ஐயமே அதுவாகும். இவ்வாறு உயர்திணையின் தன்மையை, அல்லது செயலை, ஒப்புமை காட்டிப் பேசுவதை அகப்பொருள் இலக்கியங்களிலும், கலம்பகங்களிலும் காணலாம். இவ்வரம்பை அப்படியே பின்பற்ற வேண்டுமென்றவிதியுமில்லை. "பழையன கழிதலும் புதியனபுகுதலும் வழுவல கால வகையினுனே" என்ற விதிக்கேற்ப உயர்திணையோடு அஃறிணையைப் பொருத்திப் பாட்டெழுவது புதியன புகுதல் "எனக் கொள்க.

எத்துணையோ மாறுதல்கள் நிகழும் இந்த இருபதாம் நூற்ருண்டில், கவிஞருடைய பாடல் கூறும் புதுமைக் கருத்துக்களைப் பொருந்தாது என்று கூறுபவர்கள்; இதுவரை கூறிய எடுத்துக் காட்டுக்களை நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும். தமிழகத்தின் தலை சிறந்த கவிஞரை அர்த்தமற்ற பாட்டெழுதுபவர் என்று கூறுவது அர்த்தமற்ற செயலாகும். அவர் எழுதும் பாடல்கள் பொருத்தமற்றவை என்று சொல்வது மிகப் பெரிய தவறு. இனிமேலாவது, கவிஞரின் பாடல்களிலுள்ள நயத்தையும், பொருட் சிறப்பையும் உணர்ந்து; போற்ற முன் வர வேண்டும் என்று அவர்களைக் கேட்டு முடிக்கிறேன்.

★

வெண்பாப் போட்டி 13.

★

ஈற்றடி

'வெறி' எனத் தொடங்கி 'சரி' என முடிக்க

இறுதி நாள் 18-2-61.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

வெண்பாப் போட்டி

கோதுமை தந்த குணம்.

பட்டப் படிப்பிருந்தும் பன்னாடு கண்டிருந்தும்
நட்டும் குடித்தலைமை நாட்டிருந்தும்—மட்டியாய்
தீதுசெயும் பார்ப்பனர்கால் தேய்த்துநீர் உட்கொள்ளல்
கோதுமை தந்த குணம்.

—மது. செங்காட்டுப்பட்டி.

கொண்ட மனைவிதன்னைக் கூறி விலைப்படுத்தி
ஒண்டொடியாள் சேலை உரிந்ததூஉம்-அண்ணன்தன்
பாதுகையால் பார்முழுதும் ஆண்டதூஉம் பாவியர்க்குக்
கோதுமை தந்த குணம்.

—பி. கோ. கோவிந்தராசன், ஆமதாபாத்-2.

ஏந்தலாம் வள்ளுவன்போல் இன்சோற்றை உண்டவள்தான்
காந்தி உயிர்காத்தாள் கன்னித் தமிழ்வள்ளி
பாதகன் கோட்சே பலியிட்டான் குண்டுக்கே
கோதுமை தந்த குணம்.

—புதுவை இரத்தினசனார்த்தனன், தாம்பரம்.

காட்டு மிராண்டியெனக் கண்டபடி ஏசியதும்
நாட்டின் பகுதிகளைத் நன்கொடையாய்—வாட்டுகின்ற
ஏதிலர்க்கு வீசும் இறுமாப்பும் நேருவுக்குக்
கோதுமை தந்த குணம்.

—ச. 'கருப்பணன்' எ. புதூர்.

சொறிசிரங்கு சோம்பல் தொலைவில்லாக் காமம்
அறிவு மயக்கம் அதிர்ச்சி-செறிசினம்
ஊதுகா மாலைபோல் ஊதல் வடவருக்கே
கோதுமை தந்த குணம்.

—சி. பி. சாமி, ஆற்காடு.

வஞ்சித்தல் தென்னாட்டார் வாழ்வழித்தல் எஞ்ஞான்றும்
நெஞ்சாரப் பொய்யுரைத்தல் நேர்மையின்மை-அஞ்சுகமே
தீதுமிகு வன்னெஞ்சம் தீயவட நாட்டார்க்குக்
கோதுமை தந்த குணம்.

—தி. குமாரராசு சென்னை-1.

ஊருக்(கு) அறிவுரை! ஓங்குசினம்! ஏச்சடைதல்!
பேருக்கு வாக்குறுதி! பின்புத்தி!-யாருக்கும்
வாதப் பொருளாய் வதிவதெலாம் நேருவுக்குக்
கோதுமை தந்த குணம்.

—மு. சீனிவாசன், பெரியகுளம்.

"நாடாளும் பண்டிதர் "நான்சென்ஸ்" எனச்சொல்லித்
தேடாத செல்வம்! திராவிடத்தின்-மாட்சியாம்!
தீதில் தமிழகத்தைத் திட்டுவது; வேறல்ல
கோதுமை தந்த குணம்."

—அ. சுப்பிரமணியன், திருப்பாலப்பந்தல்.

செந்தமிழர் சிங்களத்தே தீய்ந்துருக எங்கிருந்தோ
வந்ததி பேத்தியர்' வாழ்வடைய-முந்துகிறார்
ஓதுநீ தீயதாம் ஓரவஞ்சம் புல்லுணவாம்
கோதுமை தந்த குணம்.

—பொன்முருகுமணியடியான், கோதைமங்கலம்.

நெல்லுக்கு நேரில்லை நீணிலத்துத்தானியங்கள்
புல்லென்று மேலோர் புகன்றுள்ளார்-புல்லறிவுப்
பேதை வடவர் பிழைசெய்யும் காரணமே
கோதுமை தந்த குணம்.

—முத்துநிலா, சென்னை-15.

அஞ்சாத வீரர் அருந்தமிழ் நாட்டாரை
வெஞ்சூது செய்து வெதுப்பகிறார்-நெஞ்சினிலே
பேதமையால் தங்கேடு பேணுகிறார் ஐயகோ
கோதுமை தந்த குணம்.

—காவேரிவாசன், பல்லாவரம்.

கும்பமே ளாநடத்திப் பெண்களெலாம் கூடுவதும்
கும்பலிலே பன்னூறைக் கொன்றொழித்தும்-தம்மதமே
மேதகை என்று வெறிப்போரில் கொல்வதெலாம்
கோதுமை தந்த குணம்.

—விசாலாட்சி கீவளூர்.

நாசியின் மேல்சினம், நாகாக்காப் பண்புடமை,
பாசமின்றி தென்னாட்டைப் பாழாக்கல்-பேச்செல்லாம்
ஓதும் மொழிவெறி இத்தனையும் "நேருவுக்குக்"
கோதுமை தந்த குணம்.

—பத்மா, சென்னை-12.

மதத்துக்காச் சண்டையிட்டு மாய்வதும் தங்கள்
இதத்துக்கா மற்றவரை எத்தி-மிதிப்பதுவும்
காதல் வெறியாட்டு கள்ளுண்டல் தீயவெல்லாம்
கோதுமை தந்த குணம்.

—"திருமலையன்" அகிலாண்டபுரம்.

நாடாளும் நாயகரே! நாவில் நரம்பிலையோ?
தேடாதீர் தென்னவரின் தீப்பகைமை!-கூடாத
சூதுமொழி பேசிச் சுரண்டலைத் தூண்டுவதா
கோதுமை தந்த குணம்.

—பெ. இராசேந்திரன், மருதங்குடி.

செந்தமிழை சாய்ப்பதற்கும் தென்னாட்டை மாய்ப்பதற்கும்
நந்தமிழர் வாழ்வை நலிப்பதற்கும்-வந்தவர்கள்
கோதுபல செய்வதற்கும் கொல்வடவர் பாழ்உணவாம்
கோதுமை தந்த குணம்.

—மா. அண்ணாமலை, புதுவை.

இட்டுண்(டு) இருந்துவிருந் தோம்பிக் கரவிலன்பில்
கட்டுண்(டு) உயிர்விடுவர் செந்தமிழர்-கெட்டுமனம்
சூதுமிகச் செய்து குடிகெடுப்பர் பாழ்வடவர்;
கோதுமை தந்த குணம்.

—சா. கா. சாகுல் அமீது, சித்தையன்கோட்டை.

தென்னவரை மூடர் எனப்பழித்த சீநேரு
தென்னவரே! கோதுமை தின்னுமின் என்கின்றார்
தீதுரை வெங்கோபம் திண்செருக்கு கீழ்மையெலாம்
கோதுமை தந்த குணம்.

—இரா. மு. இளமுருகு, திருவண்ணாமலை.

நேருவே நெல்லரிசிச் சோறுண்டால் நேர்மையொடு
வீரம் அறிவு விளைந்துவரும்;-தேருவீர்
ஓதும் உமக்கோர் உருப்படியில் லாப்புத்தி
கோதுமை தந்த குணம்.

—சா. நடராசன், சென்னை-12.

தயாராகிறது:

தத்துவ மேதை

டி. கே. சீனிவாசன்

எழுதிய

நிலவும் தாமரையும்

(மலிவுப் பதிப்பு)

விலை ரு. 1-50

விபரங்கட்கு:

K. R. நாராயணன்
12, மாடல் ஹட்மண்ட் ரோடு
சி. ஐ. டி. நகர்
சென்னை-15.

விற்பனையாளர்களுக்கு அறிவிப்பு.

தென்றல், முல்லை இதழ்களின் பட்டியல் கிடைத்த ஒரு கிழமைக்குள் பாக்கியை அனுப்பாவிடில், இதழ்கள் அனுப்புவது அறிவிப்பின்றி நிறுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகி.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.
தொலைபேசி எண் 83510.